# சாளரம்

இளையோர் திங்கள் இதழ் · மே 1992 · விலை 12 ரூபா



வள்ளங்கள் உடைந்தாலென்ன
வலிய கரங்கள் இருக்கின்றன
வலை வீச

ஓ— பகைவனே
உணர்ந்து கொள்

உறுதி கொண்ட எம்
உள்ளங்களை உடைத்தெறிய
உன் 'ஷெல்'களால் முடியாது!

சாளரம்
இளையோர் திங்கள் இதழ்
மே. 1992

# உள்ளே...


- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ நுண்ணறிவுப் போட்டி
- ☐ வாத்தியார் வீட்டு விறாந்தை
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ ஆபிரகாம் லிங்கன் சொன்ன கழுதைக் கதை
- ☐ இலக்கியக் காட்சி
- ☐ அரும்புகள்
- ☐ தெறிப்பு
- ☐ வரலாறுபற்றி பாடநூல்கள் கூறுபவை
- ☐ சாதனைகளால் சாதனை படைக்கும் [illegible]
- ☐ அறிவியல் அணுகுமுறை
- ☐ பனிநீர் படிதலும் பனிப்புகார் எழுதலும் எமது வானிலையில் நிகழும் விதம்
- ☐ பொய்யுக்கு சாவுமணி
- ☐ பண்டமாற்றின் அளவுகோல்
- ☐ தமிழில் மேனாட்டு மருத்துவக் கல்வியின் தந்தை கிறீன் வைத்தியர்
- ☐ நிலாமுற்றம்
- ☐ சிறுகதை
- ☐ யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்
- ☐ எஸ்கிமோ மக்களுக்குப் பனிக்கட்டி விற்பனை செய்யப்படுகிறதா?


சாளரம்
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

காளம்

கதவு 02 காற்றலை 04

# மேதினம். அதன் இன்றைய முழக்கம்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஐரோப்பாக் கண்டத்தில் மேமாதம் 1ம் திகதி உலகத் தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் இத்தினத்தை புரட்சிகரமாகக் கொண்டாடினார்கள். "உலகத் தொழிலாளரே ஒன்றுபடுவீர்!" என்பதே அப்போதைய மேதின முழக்கமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளின் முதலாளி வர்க்கத்திற்கு எதிராகவே இம் முழக்கம் முன்வைக்கப்பட்டது.

காலம் உருண்டோடியது; ஐரோப்பிய நாடுகளின் முதலாளி வர்க்கம் வளர்ச்சி பெற்றது. இவ் ஐரோப்பிய நாடுகள் காலனிய ஆதிக்க நாடுகளாக மாற்றமுற்றன. காலனியல் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் உலகெங்கும் பல்கிப் பரவியது. தேசிய விடுதலைப் போராட்டங்கள் உலகெங்கும் வளர்ச்சி பெற்றன. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் "உலகத் தொழிலாளரே!" ஒடுக்கப்பட்ட தேசங்களே! ஒன்றுபடுவீர்!! என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது. இதுவே மேதின முழக்கமாக மாறியது. ஐரோப்பிய நாடுகளின் உழைக்கும் மக்களும் தேசவிடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்களும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஐக்கியப்பட்டு மேதின எழுச்சிகளை நடத்தினார்கள்.

இவை அனைத்தும் நடந்து ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்படும் முன்னரேயாகும். போராட்ட உணர்வுள்ள மக்கள் தமக்குள் உலகளாவிய முறையில் ஒன்றுபட்டு மேதினத்தைக் கொண்டாடி வந்தார்கள். அனைத்துலக மகளிர் தினம் இதற்கு மற்றுமோர் உதாரணமாகும்.

ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்ட பின்னரும் இவ்விதமான நிகழ்வுகள் தொடர்ந்தன. இவற்றை ஐ. நா. சபை ஒருபொது அனைத்துலக தினமாக பிரகடனப்படுத்தவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். உழைக்கும் மக்களும், ஒடுக்கப்பட்ட நாடுகளும் ஐ. நா. சபையின் அங்கீகாரத்துக்காகப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் போராடினார்கள், தொடர்ந்து போராடினார்கள். பல வெற்றிகளையும் ஈட்டினார்கள்.

காலம் தொடர்ந்து உருண்டோடியது. மேலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. உலக மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட ஏகாதிபத்தியம் தனது இருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ள புதிய நடைமுறைகளைக் கையாண்டது. முழுமையாக விடுதலை பெறாத அரசுகளைக் கொண்டே பல தேசங்களை அடக்கும் புதிய முறைகளைக் கையாளத் தொடங்கியது. இன்னமும் முழுமையான சுதந்திரம் பெறாத அரசுகள் தேசிய ஒடுக்குமுறை அரசுகளாக மாறின.

சிறிலங்கா அரசுக்கு ஒரு தமிழீழம், இந்தோனேசிய அரசுக்கு ஒரு கிழக்கு ரிமோர், ஈராக் அரசிற்கு ஒரு குர்டிஷ், இந்திய அரசுக்கு பஞ்சாப், காஷ்மீர், போன்றன, பிலிப்பைன்ஸ் அரசுக்கு ஒரு மோறோ என்று ஏராளமான உதாரணங்களைக் காணலாம். ஆசிய ஆபிரிக்க நாடுகளிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

தம்மை ஒரு தேசமாக உருவகித்துக் கொள்ள போராடிக் கொண்டிருக்கும் இந்த அணி தனி அனைத்துலக அரசியல் சக்தி ஒருயாக உலக அரங்கில் தோன்றி வளரப் போவது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த அணியை இன்று உலகின் எந்த நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் கூட அந்த அணி தனி ஒரு அரசியல் சக்தியாக வளரத்தான் போகின்றது.

19ம் நூற்றாண்டின் இறுதியில் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர் என்று இருந்த மேதின முழக்கம், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட தேசங்களே! ஒன்றுபடுவீர்!! என்ற முழக்கமாக மாறியது 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட தேசங்களே தேசமாக பிறப்பெடுக்கப் போராடும் தேசியங்களே ஒன்றுபடுவீர்! என்ற முழக்கமாக மாறுமா? இதுதான் எமது அபிலாசை.

குழந்தைக் கவி

## உலகமும் மனிதனும்

பந்து போல உருண்டையாம்
பரந்து விரிந்த உலகமே
சேர்ந்து வாழும் மனிதரில்
நூறு நூறு இனங்களாம்

ஆறு காடு மலைகளும்
ஆர்த்தெழுந்த கடல்களும்
வீறுகொண்ட எரிமலை
வெடிக்கும் இந்த உலகடா!

நீதி சொன்ன மனிதர்கள்
நிலைத்த புனித மண்ணிலே
ஒதி மனிதன் வாழ்கிறான்
உயர்வு தாழ்வு பேசுறான்

யேசு புத்தர் காந்தியை
நித்மும் சொல்லி வாழ்கிறான்
மாசு கொண்ட மனதினால்
மனித இனத்தை அழிக்கிறான்

—வன்னி

# நுண்ணறிவுப் போட்டி

கதவு-2 காற்றலை-4

1) ஆண் பெண் சமத்துவமென்பது (இன்று ஆண்கள் அனுபவித்துவரும் அனைத்து உரிமைகளும் பெண்களும் அனுபவிக்க வேண்டும் என்பது/ சமூக நீதிகளுக்கு கட்டுப்படுவதிலும், சமூக செல்வங்களை அனுபவிப்பதிலும் பால் வேறுபாடு இருக்கக் கூடாது என்பதாகும்.)

2) பெண்நிலைவாதிஎன்பது (ஒரு பெண்பால் பதம் / ஒரு பொதுப்பால் பதம்)

3) பல்கலைக் கழகங்களிலும், ஆசிரிய கலாசாலைகளிலும் பின்பற்றப்பட்டுவரும் புகுமுக அறிமுக நிகழ்ச்சியானது (ராக்கிங்) / (பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்துகிறது. / மாணவ மாணவிகளில் ஒரு சாராரின் வக்கிர மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.)

4) இலங்கையில் பல்கலைக்கழகங்கள் (கல்வியின் அதி உயர் பீடம் / கல்வியின் உயர் பீடங்களில் ஒன்றாகும்)

5) பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள் உட்பட பல அரசு அதிகாரிகள் போர்ச்சூழலைக் காரணங்காட்டி அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல் விடுவது (தவிர்க்க முடியாத ஒரு நிலமை/ பொறுப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரு சாக்குப்போக்கு).

6) சிறிலங்காவில் இருந்து தருவிக்கப்படும் சில உணவுப் பொருட்களுக்கு இன்று அதிக விற்பனவு வரி விதிக்கப்பட்டிருப்பது (விடுதலைப் புலிகள் வரி மூலம் அதிக பணம் சம்பாதித்துக் கொள்ள / உள்நாட்டு உற்பத்தி உணவுப் பொருட்களின் விற்பனவுச் சந்தையைப் பாதுகாக்க.)

7) பொதுஅறிவு என்பது (பாடத்திட்டத்திற்கு உட்பட்ட ஒரு வகை நூற் கல்வியேயாகும்/ பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட நூல்களின் உதவியுடன் கற்றுக் கொள்ளப்படும் ஒரு கல்வியாகும்.)

8) சமூக சீர்கேடுகள் என்பது (தீய பழக்க வழக்கங்கள் / மனிதர்களிடையே நிலவவேண்டிய சினேக உறவுகளுக்கு குந்தகமான அம்சங்கள்.)

9) இயற்கை அழகை இரசித்து இன்புறும் முருகியல் (அழகியல்) உணர்வுள்ளவர்கள் மன உரமுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள் / மனதை ஒருமுகப்படுத்தவும் அமைதிப்படுத்தவும் வல்லவர்களாக இருப்பார்கள்.

10) உளவியல் அறிவென்பது (மனப் பிறள்வுடையவர்களை குணப்படுத்த உதவும் ஒருஅறிவியற் துறையாகும். / மனிதர்களின் தனிமனித நடவடிக்கைகளையும் சமூக நடவடிக்கைகளையும் தீர்தீர்மானிக்கும் உளவியல் காரணிகள் பற்றிய அறிவாகும்.)

# ஏன் வேண்டும் படிப்பு?

அரச சபையிலே மன்னரும் மந்திரி பிரதானிகளும் வீற்றிருந்தார்கள். திடீரென மன்னனுக்கு ஒரு சந்தேகமேற்பட்டு அங்குள்ளவர்களைப் பார்த்து "ஏன் படிப்பு வேண்டும்" என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

முதல் அமைச்சர் எழுந்து "ஒரு நாட்டை சிறப்பாக ஆள படிப்பு வேண்டும்" என்றார்.

அரசவைப் புலவர் எழுந்து "கலை பண்பாட்டு விடயங்களை அறிந்து கொள்ள படிப்பு வேண்டும்" என்றார்.

ஆஸ்த்தான வித்துவான் எழுந்து. "புகழ் அடைவதற்கு படிப்பு வேண்டும்" என்றார்.

இவர்கள் சொன்ன பதில்களால் அரசனின் மனம் திருப்தியடையவில்லை. இறுதியாக விகடகவியைப் பார்த்தான். விகடகவியும் எழுந்து "அரசே நான் கூறும் பதிலால் தங்களுக்கு ஏதும் மனக்குழப்பம் ஏற்படுமோ தெரியவில்லை" என்றான். அரசனும் "அப்படிதான் கோபிக்க மாட்டேன் என்று பதிலைக் கூறுமாறு கூறினார்:

உடனே விகடகவியும் "இப்படியான முட்டாள்த் தனமான கேள்விகளைக் கேட்டு அடுத்தவர்களை சங்கடத்திற்குள்ளாக்காமல் இருக்க படிப்பு வேண்டும்" என்றான்.

அரசனும் மறுபேச்சு இல்லாது மறு பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

—கல்மடு செல்வதேவன்

# வாத்தியார் வீட்டு விறாந்தை

எங்கள் ஊரில் பல ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் 'வாத்தியார்' என்ற பெயர் ஒருவருக்கே நிலைத்து விட்டது அவர் ஒரு இளைப்பாறிய ஆசிரியர். நல்ல அறிஞர், அவர் வீட்டு விறாந்தையில் இளைஞரும் முதியோருமாகப் பலர் அடிக்கடி கூடுவோம், பலதும் பத்தும் பேசுவோம்.

அன்று செல்லையா அண்ணர் கொஞ்சம் தாமதமாகவே வந்தார்.

''ஒரு மாதிரி வழிக்கு வந்திட்டினம்'' என்ற பீடி கையோடு பாயில் உட்கார்ந்தார்.

செல்லையா அண்ணர் எதைப்பற்றிச் சொல்கின்றார் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை.

''விளங்கக்கூடியதாகச் சொல்லுங்கோ செல்லையா அண்ணை''

சங்கக்கடைச் சண்முகராசா கேட்டார்.

''இண்டைக்குப் பேப்பர் பார்க்கயில்லையோ?''

''பார்த்தனான்''

''அதிலை கிடக்கெல்லே சுதந்திரக் கட்சியும் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டிட்டுது எண்டு, அதைப்பற்றித்தான் சொன்னனான். எங்கடை சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டால் பிரச்சினை தீர்ந்ததுக்குச் சமன்தானே.''

பல்கலைக்கழக மாணவன் கமலநாதன் அவசரமாக இடைமறித்தான்.

''உதெல்லாம் உவையளின்ர புலுடா அண்ணை. ஏற்றுக்கொண்டமாதிரி நடிக்கினமே பொழிய ஏற்றுக் கொள்ளயில்லை.''

''ஏன் தம்பி அப்பிடிச் சொல்லுறாய்? கட்சியாலை நியமிக்கப்பட்ட குழுதானே சிபார்சு செய்திருக்குது''

கமலநாதன் ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்தினான்.

''சுயமாக நிர்ணயிக்கும் உரிமைதான் சுயநிர்ணய உரிமை. அது பிரிவினையாகவும் இருக்கலாம். ஐக்கியமாகவும் இருக்கலாம். சிங்கள இனம் அநியாயம் செய்தால் தமிழர் பிரிஞ்சு தனிநாடு அமைக்கலாம். சிங்கள இனம் நியாயமாக நடந்தால் சேர்ந்து ஐக்கியமாக வாழலாம். என்ன தீர்மானத்தை எடுக்கிறதெண்டது தமிழ் மக்களைப் பொறுத்த விஷயம். அவைதான் அதைத் தீர்மானிக்க வேணும். அதுதான் சுயநிர்ணய உரிமை. ஆனால் சுதந்திரக்கட்சி அந்த உரிமையைத் தமிழ் மக்களிட்டை விடயில்லை. அவை எப்பிடித் தீர்மானிக்கவேணும் எண்டதைத் தானே முடிவு செய்திட்டுது. இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதிக்காத வகையிலை சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவேணுமாம். அதாவது பிரிஞ்சுபோகத் தீர்மானிக்கக் கூடாதாம். சிங்கள இனம் தமிழருக்கு அநியாயம் செய்தாலும் பிரிஞ்சு போகக்கூடாது எண்டதுதான் சுதந்திரக் கட்சியின்ரை நிலைப்பாடு. இது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிற மாதிரி நிராகரிக்கிற உபாயம். பிரிஞ்சுபோற உரிமைதான் அநியாயத்துக்கு எதிரான பாதுகாப்பு. அந்த உரிமையோடை சேர்த்துச் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறதுதான் உண்மையான அங்கீகாரம்.''

''அது மட்டும் போதாது தம்பி''

''ஏன் வாத்தியார் ஐயா?''

''பிரிஞ்சு போறதுக்குத் தமிழினம் தீர்மானிக்குதெண்டு வைச்சுக் கொள்ளுவம் அவையள் தங்கடை தனிநாட்டை எங்கை அமைக்கிறது?''

''தமிழ் மக்களின்ரை பாரம்பரிய தாயகத்திலைதான்.'' இது கமலநாதனின் பதில்.

''அது சரி. தாயகம் இல்லாமல் தனிநாடுஇல்லை. தமிழ் மக்களின்ரை பிரிஞ்சுபோற உரிமையை அங்கீகரிக்கிறதெண்டால் அவை தனிநாடு அமைக்கிறதை அங்கீகரிக்கிறதெண்டு அர்த்தம். தனிநாடு அமைக்கிறதுக்குத் தாயகம் இருக்கவேணும். ஆகவே, தமிழருக்குப் பாரம்பரிய தாயகம் இருப்பதையும் அங்கீகரிக்கவேணும். தாயகத்தை அங்கீகரியாமல், பூரண சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகச் சொல்லுவது அர்த்தமில்லாத பேச்சு. தமிழரையும் உலகத்தையும் ஏமாத்திற முயற்சி.''

கமலநாதனும் வாத்தியாரும் சொன்னவற்றை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

— ஞானகுரு —

## நம்பிக்கை

- வாழ்க்கை இருக்கும் வரை நம்பிக்கை இருந்து கொண்டே இருக்கும்.
- திறமையும் நம்பிக்கையும் வெல்லற்கரிய படைகளாகும்.
- எங்கு நம்பிக்கை இல்லையோ அங்கு முயற்சி இருக்காது.
- ஒரு கெட்ட உடைமையைவிட ஒரு நல்ல நம்பிக்கை மேலானதாகும்.

# பகலவன் பதில்கள்

வே. விஜிதரன் — துணுக்காய்

1) கே:- ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தலைவர் பிரபாகரனின் திறமைகளை மெச்சியிருக்கிறாரே
ப:- காலங்கடந்த ஞானோதயம்

மு. தேவகி — தாவடி

2) கே:- மணமலர்கள் ஐந்தும் யாவை?
ப:- தாமரை, அசோகம், முல்லை, குமுதம், மா இவற்றை விரைமலர் எனவும் கூறுவர்.

சே. நேசயல் — கொழும்புத்துறை

3) கே:- கூலம் என்பதன் பொருள் யாது?
ப:- நவதானியம்

வ. சிவதாசன் — மல்லாகம்

4) கே:- போரை தொடர்ந்து நடத்தும்படி மல்வத்தை மகாநாயக தேரோ கூறியிருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?
ப:- தசராஜதர்மம் தலைகீழாகத் தொங்குகின்றது

ப. கேதீஸ்வரன் — கிளிநொச்சி

5) கே:- யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பாடலைப் பாடிய புலவர் யார்?
ப:- 'யாவரும் கேளீர்' அல்ல. யாவரும் கேளிர்! எவ்லோரும் உறவினர் என்பது பொருள், இப்பாடலைப் பாடிய்வர் கணியன் பூங்குன்றனார்.

ச. சத்தியநாதன் — பளை

6) கே:- ஜனாதிபதி பிரேமதாச திறமை மிக்கவர் என்பதை ஒத்துக்கொள்கின்றீர்களா?
ப:- ஆம் — நேர்மையீன அரசியலில்

மு. குமரகுருபரன் — நாவற்குழி

7) கே:- 'சுருங்கை வீதி' என்றால் என்ன?
ப:- நிலத்துக்குக் கீழான பாதை.

# நுண்ணறிவுப் போட்டி 4க்கான பதில்கள்

1) இரண்டு பதிலுமே தவறானவை. ஐரோப்பிய நாடுகளில் தோற்றம் பெற்று ஐரோப்பிய நாடுகளால் பரப்பப்படும் 'எயிட்ஸ்' என்னும் இந்நோய் இன்று ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பரவி வருகின்றது. இன்று இது ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் உரித்தான ஒரு நோய் அல்ல. 'எயிட்ஸ்' நோயில் இருந்து தம்மை பாதுகாப்பதானால் இதை உலகளாவிய ரீதியில் எதிர்க்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

2) தியாக உணர்வை மதிக்கும் பண்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக.

3) தான் வாழும் சூழலைப் பற்றிய புரிந்து கொள்ளல்கள் உடையவர்களாய் இருத்தல்.

4) இரண்டுமே தவறு. ஆண்டான்களுக்கும், அவர்களுடன் ஒத்துநின்ற மதபீடங்களுக்கும் எதிராக கிளர்ச்சி செய்ததற்காக.

5) இது வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களின் நிலமையைக் குறிக்கிறது.

6) ஆண்மேலாதிக்கத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட முறைகளாகும்.

7) பாடசாலைகளின் பரவலான வளர்ச்சியைத் தடுக்கும் ஒரு செயலாகும்.

8) மாணவர்களின் பல்வேறுபட்ட திறன்களையும் வெளிக் கொணர்வதில் பெறப்படும் வெற்றிகள்.

9) தனது ஆக்க பூர்வமான பங்கை வகிக்கக்கூடிய வேலைகளில் உறுதியாய் திறல்.

10) தான் மாணவனாக இருக்கும் காலத்திலேயே போராட்டத்தில் பங்கு கொண்டேன் எனப் பெருமைப்பட வாழ்வதே சிறந்தது.

நுண்ணறிவுப் போட்டிக்கான சரியான பதிலை எழுதியனுப்பியவர்.

எஸ். சரவணன்
கண்டி வீதி,
பளை.

நகைச்சுவை

# ஆபிரகாம் லிங்கன் சொன்ன கழுதைக் கதை

ஆபிரகாம்லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்தபோது அவருக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டன.

தேர்தல் சமயத்தில் அவருக்கு உதவிசெய்தவர்களுள் பெரும்பாலோர் அவரை ஏதாவது பதவிகேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பிரச்சினை பற்றிப் பொதுக் கூட்டமொன்றில் பேச நேர்ந்தபோது ஆபிரகாம் லிங்கன் ஓர் உவமைக் கதையைக் கூறினார்.

அந்தக்கதைதான் இது

ஒரு நாட்டு மன்னர் வேட்டையாடுவதற்குப் புறப்பட்டார்.

மன்னர் தம் அமைச்சரை அழைத்து "நான் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்லப் போகிறேன். இன்று மழைபெய்யுமா?" என்று கேட்டார்.

"மன்னர் அவர்களே! இன்று மழை பெய்யாது. என் பேச்சை நம்பி வேட்டைக்குச் செல்லுங்கள்" என்று கூறினான் அமைச்சன்.

அமைச்சரின் பேச்சை நம்பி அரசர் வேட்டைக்குப் புறப்பட்டார்.

மன்னன் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், எதிரே ஒரு குடியானவன் கழுதை மீதமர்ந்து வந்து கொண்டிருந்தான்.

மன்னன் அவனை நோக்கி "என்ன குடியானவனே இன்று மழைபெய்யுமா?" என்று கேட்டார்.

"இன்று நிச்சயமாக மழைபெய்யும், உடனே நீங்கள் திரும்பி விடுங்கள்" என்று குடியானவன் கூறினான்.

குடியானவனின் பேச்சைப் பொருட்படுத்தாது மன்னர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார்.

சற்றுதூரம் சென்றதும் கடும் மழை பெய்தது. அதனால் மன்னர் முழுமையாக நனைந்துவிட்டார்.

திரும்பி வரும் வழியில் மன்னர் அந்தக் குடியானவனை மீண்டும் சந்தித்தார்.

"மழைபெய்யும் என்று அவ்வளவு உறுதியாகக் கூறினீர்களே! அவ்வளவு திட்டவட்டமாக எவ்வாறு தெரிந்தது" என்று மன்னர் கேட்டார்.

குடியானவன் கீழ்க்கண்டவாறு பதிலளித்தான்:

"மழை பெய்யுமா பெய்யாதா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும் கழுதை தன் காதுகளை முன்பக்கமாக நீட்டிக் கொண்டால் மழை பெய்யும் என்னும் உண்மையை நான் அறிந்து கொள்வேன்."

அரண்மனை திரும்பிய மன்னன் அமைச்சரை பதவியிலிருந்து விலக்கிவிட்டு குடியானவனுடைய கழுதையை அமைச்சராக ஆக்கிவிட்டான்.

இந்தக்கதையை கூறி முடித்த ஆபிரகாம்லிங்கன் "அதற்குப் பிறகு தான் மன்னனுக்குப் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஊரில் உள்ள எல்லாக்கழுதைகளும் தங்களுக்கும் அமைச்சர் பதவி கொடுத்தாக வேண்டும் என்று நச்சரிக்கத் தொடங்கி விட்டன" என்றார்.

## ஓவிய வாக்கியம் பதில்

சிறைகளே உலகமென்று நீ உனக்குள்
சின்ன எண்ணத்தை வளர்த்திருந்தாய்!
வெளியே ஒரு உலகம்
வெளிச்சத்துடன் கிடக்கிறது.
உனக்குள்ளும் வெளியேயும் இருக்கும்
சிறைகளை உடைத்தெழு!
உனக்கும் சிறகுகள் முளைக்கும்!

செல்வி. ஜெயலட்சுமி
சுப்பிரமணியம்
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

## இலக்கியக் காட்சி

# கடமையும் தவிப்பும்

☐ உருத்திரா

பொருளீட்டி வருவதற்காகக் கணவன் வெளியூர் சென்றிருக்கிறான்.

அவன் இவ்வாறு அடிக்கடி வெளியூர் சென்று பொருளீட்டி வருவது வழக்கம். திரும்பி வருவதாகச் சொன்ன நாளில் கட்டாயம் வந்துவிடுவான். இந்தத் தடவை என்ன நடந்ததோ தெரியவில்லை. அவன் திரும்பி வருவதாகச் சொன்ன தினம் கடந்து பல நாட்களாகியும் இன்னும் வரவில்லை.

அவனது பொருளீட்டும் பணியில் ஏதோ தாமதம் ஏற்பட்டுவிட்டது போலும். பொருளீட்டச் சென்றவன் பொருளோடு தானே வரவேண்டும். இதனாலேயே அவன் வீடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது.

ஆனால் வீட்டிலோ. மனைவி அவனது வரவை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கிறாள். உணவு இல்லை. நித்திரை இல்லை. எந்த நேரமும் கணவனைப்பற்றிய ஏக்கமும் தவிப்பும்தான். கணவனுக்குத் தீங்கேதும் நேரக்கூடாது என்று பிரார்த்திக்காத நேரமே இல்லை.

வீட்டில் சிறு பிள்ளைகள் உள்ளனர் தனது தவிப்பைப் பிள்ளைகள் அறிந்தால் அவர்களது பிஞ்சுமனம் பாதிப்படையும் என்பது அவளுக்குத் தெரியும். எனவே தனது மனத்தவிப்பைத் தனக்குள் அடக்கிக் கொள்கிறாள். கணவன் இல்லாத இல்லாத நேரத்தில் பிள்ளைகளின் மனதில் அவனைப் பற்றிய கவலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தன் கடமை என்பதை உணர்ந்து நடக்கிறாள்.

எப்படியாயினும், தன் மனம் படும் பாட்டை யாரிடமாவது சொல்லி ஒரு ஆறுதல் வார்த்தை கேட்க வேண்டும் போல இருக்கிறது. பிள்ளைகளுக்குத் தெரியக் கூடாது.

தமிழ்ப் பெண்களுக்கே உரித்தான நாணம் அவளுக்குத் துணைபோகின்றது.

தான் வளர்க்கும் கிளியைக் கையில் ஏந்தி யாருமறியாமல் அதனிடம் தன் மனத்தவிப்பைச் சொல்கிறாள்.

"என் கணவர் இன்று வருவார் எனச் சொல் கிளியே" என்று மென் குரலில் கெஞ்சுகிறாள்.

"செந்தார்ப் பைங்கிளி முன்கைஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை"

— அகநானூறு —

# தானத்தில் சிறந்தது இரத்ததானம்

தானங்கள் எல்லாவற்றிலும் இரத்ததானமே தலைசிறந்த தானமாகும். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் இரத்ததானத்தின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்படுகின்றது.

காயப்பட்ட ஒருவரின் உடலிலிருந்து அதிகளவு இரத்தம் வெளியேறுமானால் அவர் மரணத்தைத் தழுவ நேரிடும். மனித இரத்தத்துக்கு மாற்றீடு மனித இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே, காயப்பட்ட ஒருவருக்கு இரத்ததானம் செய்வது மரணத்திலிருந்து அவரை மீட்பதாகும் எனவே இரத்த தானம், உயிரைக்காக்கும் தானம் ஆதலால் அது தலை சிறந்த தானம்.

இரத்தம் வழங்குபவர்கள் 18 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். 45 கிலோ கிராமுக்கு அதிகமான எடையுள்ளவர்களாக இருக்க வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் செங்கண்மாரி, மலேரியா போன்ற நோய்களினால் பீடிக்கப்படாதிருத்தல் வேண்டும், கடந்த இரண்டு வாரங்களுள் அம்மைப்பால் கட்டாதிருத்தல் வேண்டும்.

நாங்கள் வழங்கும் இரத்தத்தை எங்கள் உடல் ஏழு மணி நேரத்துக்குள் மீளப் பெற்றுவிடும். இரத்தம் வழங்குவதால் பலவீனம், நடுக்கம், சக்திகுறைவு ஆகிய பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு என்ற தப்பான அபிப்பிராயம் நிலவுகின்றது. அது முற்றிலும் தவறானது. இரத்தம் வழங்குவதால் எங்கள் உடலில் இரத்தத்தை உற்பத்தி செய்யும் என்பு மச்சைகள் புத்துயிர்ப்பு அடைகின்றன. இரத்ததானம் செய்த ஒருவர் மூன்று மாதத்தின் பின் மீண்டும் இரத்ததானம் செய்யலாம்.

நான்கு வகையான இரத்த இனங்கள் உள்ளன. அவற்றுள் 'ஏபி' என்ற இனம் பொது வாங்கி, 'ஓ' என்ற இனம் பொது வழங்கி, எல்லா இன இரத்தத்தையும் ஏற்கக்கூடியது. பொது வாங்கி எல்லா இன இரத்தத்துக்கும் மாற்றீடாக ஏற்றக் கூடியது பொது வழங்கி

வாங்கிகள்

| வழங்கிகள் | ஏ | பி | ஏபி | ஓ |
|---|---|---|---|---|
| ஏ | √ | × | √ | × |
| பி | × | √ | √ | × |
| ஏபி | × | × | √ | × |
| ஓ | √ | √ | √ | √ |

—கதிரவன்



## சுரண்டல்கள்

அன்று ஆண்டான் அடிமையைச்
சுரண்டி வாழ்ந்தான்
முதலாளி தொழிலாளியைச்
சுரண்டிவாழ்ந்தான்
இன்றும் -
நெருக்கமான
பிரயாணங்களின் போது
நடக்கின்றனவே சுரண்டல்கள்!

— உமையூரான்
யாழ். பல்கலைக்கழகம்.

□□

## 'சீதன தாசர்கள்'

எமது சீதனத்தாசர்களுக்கு
சீதனம் மாத்திரமல்ல
சிங்கார நாச்சியார்
மட்டுமல்ல
செல்லுமிடமெல்லாம்
கூடவே சென்று
கணவன் பணிபுரியும்
நவீன கண்ணகிகளும்
தேவையாம்.

—சதாசிவம்
மட்டுவில்

□□

## மண்ணைப் பாடுங்கள்

கவிஞர்களே
கவனியுங்கள்!
மலையையும் மதியையும்
மான்விழி அழகையும்
நதியையும்
நங்கையர் நடையையுமா
பாடிக்கொண்டிருக்கிறீர்கள்
மண்ணைப் பாடுங்கள்!
மகத்தான விடுதலைப் போரின்
மகிமையைப் பாடுங்கள்.

—இ. ரவிக்குமார்
உருத்திரபுரம்

## எனது கிராமம்

வேர்கள் அறுக்கப்பட்ட
மரங்கள் அதன்மேல்
வேதனைக்கீதம் பாடும்
குயில்கள்
அழிந்து போன வீதிகள்
ஆங்காங்கே
அழுகிய பிணவாடைகள்
நாய்களின் ஓலம்
அரக்கர் ஆட்சியில் எனது கிராமம்

— வே. விஜயன்
முல்லைத்தீவு

□□

## வருந்தாதே பெண்ணே!

மாமரத்தில் பொன்னூஞ்சல் கட்டியாடும்
மரகதத்தை மாணிக்கக்கிளியை இன்பக்
கோகுலத்தின் குரலாளை கொஞ்சிப்பேசிக்
குழந்தைகட்குப் பாலூட்டத்துடிக்கும் தாயை
தூமலரைத் தூண்டாத மணிவிளக்கை
துடிதுடிக்கச்சிறையினிலே அடைத்தே விட்டார்
வானிடிந்து விழுந்தாலும் அஞ்சேன் நெஞ்ச
வஞ்சகரைப் பழிதீர்ப்பேன் வருந்தாதே நீ

— கல்பனா கபிரியேல்பிள்ளை
யாழ்/கன்னியர் மடம்
ம. வி.

□□

## உறுதிகொள்

பெண்ணே!
உலகம் உன்னை
உள்ளே தள்ளியதா?
நீயே அதற்குள்
அடைபட்டுப்போனாய்!
சாளரப் பார்வைகளில் மட்டும்
ஏக்கத்தைக்காட்டி
உதவுவோரை வேண்டி
என்ன பயன்?
உக்கிரப் பார்வைக்கு
உரம்கொடு
உறுதி என்னும் நிலை எடு
இல்லையேல்-
கம்பிச்சிறைக்குள்
கதை முடியும் என்பதுணர்.

நா. நந்தகுமார்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
கிளிநொச்சி.

## தொடர்ப்பு

❀ இதுவரை வெளிவந்த சாளரம் ஒன்பது இதழ் களையும் சேகரித்து வைத்துள்ளேன். சாளரத் தில் வெளிவரும் அனைத்து அம்சங்களும் எமது அறிவுக்கு மென்மேலும் உரமூட்டுகின்றன. சாள ரத்தில் 'நூலறிமுகம்' பகுதியை தொடர்ந்துவெளி யிடுங்கள். கடந்த பல இதழ்களில் அதனைக்காண முடியவில்லை. கையெழுத்துப் பிரதி தொடர்பாக சில அறிவுரைகளை வழங்க முடியுமா?

இனிமேல் இருமாத இதழ்களை ஒரு மாதத்தில் வெளியிடாதீர்கள். அது எமக்கும் சாளரத்திற்கு மான தொடர்பில் நீண்ட இடைவெளிகளை ஏற்படுத்தி விடுகிறது. கதை, கவிதை, கட்டுரை பயிற்சிப்பட்டறைகள் எப்போது ஆரம்பிப்பீர்கள்?

ஐ. செல்மர் எமில்
237, அருச்சுனாவீதி
யாழ்ப்பாணம்

(உங்கள் கருத்துக்களை கவனத்திலெடுக்கிறோம் உங்கள் கேள்விகளுக்கு விரைவில் நடைமுறையில் பதில் தருவதற்கு முயற்சிக்கிறோம். சில இதழ் களை இருமாத இதழாக வெளியிடுவதற்கு நடை முறையில் ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத சிக்கல் களே காரணம் என்பதை குறிப்பிட விரும்புகி றோம் )

□□□

❀ சாளரமே, சாளரமே
உன்னில்தான் எத்தனை
சாதனைகள் சாகசங்கள்
ஆகா -
அட்டையில் தான் எத்தனை
அறிவுக் கருவூலம்
நிலைமறக்கச் செய்யும் நிலாமுற்றம்
பளீரென அடிக்கும்
பகலவன் பதில்கள்
பண்பாடு, அறிவியல், பொருளியல்,
கல்வி, விளையாட்டு
இன்னும்பல இன்னும்பல
நீ காயாகி கனியாகி
என்றும் நிலைக்க
வாழ்த்துகிறேன்
வாழ்க, வளர்க.

செ. ஷாமினி
மெதடிஸ்த பெ. உ. பாடசாலை
பருத்தித்துறை

□□□

❀ 'சாளரம்' சமகால நிகழ்வுகளை கோவைப்படுத் திய கதைகளாகவும், உணர்ச்சிமிகு உணர்வுகளை மென்மையான சொற்களால் வடித்தக விதைகளா கவும் நெஞ்சில் நிலைத்து நிற்கும் ஆய்வுக் கட்டு ரைகளாகவும் சிந்தனையைத் தூண்டும் அறிவி யல் ஆக்கங்களாகவும் வெளிவருகின்றமை மகிழ்ச் சியைத் தருகின்றது

சூ. அன்ரன் றொசாந்தன்
ஆண்டு 11
மன்/நானாட்டான் ம. வி.
நானாட்டான்

□□□

❀ எனது பிரதேசத்தில் 'சாளரம்' கைகளுக்கு எட்டு வது சிரமமானதாகவுள்ளது. எமது ஒட்டுசுட்டான் பகுதிக்கு ஒழுங்காக சாளரம் கிடைப்பதில்லை. மிகத் தொலைவிலிருக்கும் எமக்கு அறிவு பொருந் திய சாளரத்தை அனுப்பியுதவுகின்றமைக்கு நன்றி, தொடர்ந்து ஒழுங்காகக்கிடைக்க ஆவன செய்யு மாறு வேண்டிக் கொள்கிறேன்.

வி. கஜேந்திரன்
ஒட்டுசுட்டான் ம வி.
ஒட்டுசுட்டான்

□□□

❀ மார்ச் - ஏப்ரல் மாத இதழ் படித்தேன். பெண்க ளின் நிலைபற்றி பெரிதும் அதில் வெளிக்காட்டி யிருந்தீர்கள். ஆணாதிக்கம் பற்றியும், சமூக ஒடுக்கு முறை பற்றியுமே அதிகம் காட்டப்பட்டுள்ளன. சமூகத்தில் பெண்களைத் தாழ்வாக விமர்சிக்கும் பெண்களும் இதில் அதிக பங்கினை வகிக்கின்ற னர். இந்தப்பக்கத்தை எடுத்துக்காட்டுவதன் மூல மும் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்ப டுத்துவது அவசியமாகிறது, மற்றும்படி அனைத்து அம்சங்களும் சிறப்புடன் அமைந்திருந்தன.

நா. நந்தகுமார்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
கிளிநொச்சி மாவட்டம்

□□□

❀ மார்ச் - ஏப்ரல் சாளரத்தில் பெண்நிலை பற்றி மூன்று பெண்களிடமிருந்து மூன்று விதமான கருத் துக்கள் வெளியிடப்பட்டமை பாராட்டத்தக்கது. அதில் பெண்கள் மீதான ஆணாதிக்கத்தை முறி யடிக்கக்கூடிய பல கருத்துக்கள் காணப்பட்டன. இதன் மூலம் பெண்கள் அடிமைகள் அல்ல. ஆணுக்கு நிகரானவர்கள்; சுதந்திரப்பறவையாக வாழவேண்டியவர்கள்: என்ற உணர்வு எல்லோர் மனதிலும் ஆழமாக பதியக்கூடியதாயிருந்தது. கருத்துக்கள் வெளியிட்ட மூன்று பெண்ணுள்ளங் களுக்கும் எனது நன்றி நிறைந்த பாராட்டுக்கள்.

த. பே. கல்பனா
யாழ்/கன்னியர்மடம் ம. வி
யாழ்ப்பாணம்.

# வரலாறு பற்றி பாடநூல்கள் கூறுபவன

சிறிது காலம் இடைநிலைப்பாடசாலைப் பாடவிதானத்தில் இருந்து நீக்கப்பட்ட வரலாறு மீண்டும் பாடசாலைகளிற் கற்பிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதன் பொருட்டு 6 ம் ஆண்டு முதல் 11 ம் ஆண்டுவரை பாடத்திட்டம் புகுத்தப்பட்டு இவ்வாண்டு தமிழ் மொழியில் 6 ம் 9 ம் ஆண்டுகளுக்குரிய நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல்களில் உண்மையான பல வரலாற்று செய்திகள் மறைக்கப்பட்டு பெருமளவுக்கு பௌத்த சிங்கள வரலாற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நூலை தமிழ் மாணவர்களுக்கு கற்பிப்பது என்பது மனச்சாட்சிக்கு ஒவ்வாததாகவும் தமிழர்களின் உண்மையான வரலாற்றை மூடிமறைத்து இலங்கை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக வந்துள்ளது என்று உண்மைக்கு மாறாக எமது இனத்திற்கு துரோகம் செய்யும் முறையிலும் கற்பிக்கமுடியாமலிருக்கின்றது என பல வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திடம் கருத்து தெரிவித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இது தொடர்பாக இ. த. ஆ. சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1. ஆண்டு 6 ஆண்டு 9 பாடநூலின் அட்டைப்படத்திலும் உள்ளேயுள்ள ஏனைய படங்களிலும் சிங்கள பௌத்த அடிப்படையிலான படங்களே காணப்படுவதாகவும், தமிழ், இந்து இஸ்லாமிய கிறிஸ்தவப் பின்னணியைப் பிரதிபலிக்கக்கூடிய ஒருபடமேதும் இல்லை. ஆதியில் சிங்கள, தமிழ் மக்களின் நாகரிகம் இருந்தும் கூட இந்நூலின் அட்டைப்படம் பௌத்த விகாரைகள், சிற்பங்கள், ஓவியங்கள், சிங்கள மன்னர்களின் உருவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

2. 6 ம் 9ம் ஆண்டு நூலின் ஆலோசனைக்குழு, பதிப்பாசிரியர் குழு, ஓவியர் அனைவரும் சிங்கள பௌத்தர்கள். தமிழர்களோ, இஸ்லாமியர்களோ பௌத்த மதத்தை தவிர்ந்த ஏனைய மதத்தினரோ இக்குழுக்களில் இல்லை. சிங்கள பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் அனைவரும் ஆலோசனைக்குழுவில் அங்கம் பெறுகின்றனர். ஆனால் யாழ்ப்பாண கிழக்கு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் இக்குழுவில் இடம் பெறவில்லை. சிங்கள பௌத்தர்களைக் கொண்ட குழுவினர் ஒரு பக்கச்சார்பின் வரலாற்றையே எழுதியுள்ளனர். இது ஏனைய இனத்தினருக்கும் ஏனைய மதத்தினருக்கும் எவ்வகையிலும் பொருந்தாது.

3. முகவுரைகளில் கூறப்பட்ட விடயங்கள் நல்ல நோக்கத்தை விளங்கவைப்பன. ஆனால் இவ் முகவுரைக்கும் நூலின் உள்ளடக்கத்திற்கும் இடையே ஒவ்வொரு அம்சங்களிலும் முரண்பட்ட தன்மைகள் இருப்பதினைக் காணலாம்.

## 6 ம் ஆண்டு வரலாறு

1. விஜயனும் தோழர்களும் முதல் முதலாக இலங்கையில் குடியேறியுள்ளார்கள் என்றும் அவர்களின் பின்னரேயே நாகரிகமான மனிதர்கள் இலங்கையில் தோன்றினார்கள் எனவும் முற்றிலும் தவறான கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

2. ஆறு சிங்கள அரசர்களின் ஆட்சிபற்றி எழுதப்பட்டுள்ளது. அத்தியாயம் 5,9வரை இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களான துட்டகைமுனு, வலகம்பாகு, மகாசேனன், தாதுசேனன், முதலாம் காசியப்பன் போன்றோர் பற்றி கூறும் தகவல்கள் கூட பௌத்த மதத்திற்கும், சிங்கள மக்களுக்கும் அவர்கள் ஆற்றிய சேவைகளையே பெருமளவில் குறிப்பிடுகின்றன. தமிழ் அரசர்கள் இராச்சியங்கள் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை.

3. துட்டகைமுனு எல்லாளனுடன் போராடச்சென்ற பாதை இலங்கை வரைபடத்தில் கீறிட்டுக்காட்டப்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம் சிங்கள மாணவர்களை தமிழருக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்யும் அடிப்படையுடையதாகக் காணப்படுகின்றது. உலகத்தில் எந்தநாட்டு வரலாற்றுப் புத்தகத்திலும் அரசன் போரிடச்சென்ற பாதையை பாடப்புத்தகத்தில் கீறிட்டுக் காட்டியுள்ளதாக நாம் அறியவில்லை.

4. தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உண்மையான திராவிட, மிக நீண்ட காலத் தொடர்புகள் முற்றாக மறைக்கப்பட்டு வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்ததாக கட்டுக்கதைமூலம் எழுதப்பட்ட மகாவம்சத்தின் அடிப்படையிலான ஆரியர் வருகை வரலாறாகக் காட்டப்படுகிறது.

5. பல பௌத்த விகாரைகளின் படங்கள் போட்டு அதன் வரலாறுகள் விபரிக்கப்பட்டுள்ள. அதே சமயத்தில் ஏனைய சமயங்களாகிய இந்து, இஸ்லாம்,

கிறிஸ்தவ சமயங்கள் இலங்கையில் இல்லை என்ற அளவிற்கு நூல் எழுதப்பட்டுள்ளது.

6. துட்டகைமுனுவால் தோற்கடிக்கப்பட்ட எல்லாளன் என்ற சோழ மன்னன் 44 ஆண்டுகள் இராஜரட்டையில் ஆட்சி செய்த செங்கோலாட்சியாளன் என்ற ஒரு வசனத்துடன் எல்லாளனின் வரலாறு முடிவடைந்து விட்டது. கவந்தீசன் வடபகுதிச்சோழர்களுடன் சண்டையிடுவதில்லை என சத்தியம் செய்து தரும்படி அவன் பிள்ளைகளாகிய துட்டகைமுனு, சத்ததீசனை வேண்டியபொழுது அவர்களிருவரும் அதனை மறுத்து விட்டார்கள் என்பன போன்ற இன உணர்வினை தூண்டும் குறிப்புக்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. அதே சமயம் மன்னன் துட்டகைமுனுவின் சார்பாக தமிழ்ப்படை வீரர்களும் எல்லாள மன்னனுடன், சேர்த்து சிங்கள படைவீரர்களும் போரடியமை போன்ற தமிழ் சிங்கள நல்லுறவை ஊட்டும் குறிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. எல்லாளனை விடக்குறைந்த ஆண்டு ஆட்சிசெய்த சிங்கள அரசர்களின் வரலாற்றிற்கு பல பக்கங்கள் கொண்ட அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது.

இப்பாடநூலில் முதலாம் அத்தியாயம் தவிர்ந்த ஏனைய அத்தியாயங்கள் யாவும் சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் பின்னணியாகக் கொண்ட மகாவம்சம் என்ற புத்தகத்தில் எழுதப்பட்ட கட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூலாக உள்ளது எனவே இந்நூலை தமிழ் மாணவர்களுக்கு கற்பிப்பது மனச்சாட்சிக்கு ஒவ்வாததாகும்.

*(இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. த மகாசிவம் அவர்களின் அறிக்கையின் ஒரு பகுதி)*

# வரலாறு படைக்கும் எயிட்ஸ் வைரஸ்

ஆரம்பம்: அமெரிக்க அரசாங்கத்திலிருந்து ஒரு இரகசிய கட்டளை ''விரைவாகவும் பெருமளவிலும் மக்களைக் கொல்லக்கூடிய ஓர் உயிரியல் ஆயுதத்தைக் கண்டுபிடியுங்கள்'' என்று. இதற்கமைய வைரஸ் நோய்க்கிருமியொன்று இரகசிய ஆய்வுகூடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதைப் பரிசோதிக்க இராணுவ ஆயுள் தண்டனைக் குற்றவாளிகள் மூவர், உயிர் தப்பினால் விடுதலை என்ற நிபந்தனையுடன் தெரிவு செய்யப்பட்டனர். பரிசோதனை முடிவில் ஒருவர் இறக்க, இது மிகவும் வேகங் குறைந்த நோயென முடிவு செய்யப்பட்ட நிலையில் மற்ற இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்நோய்க்கிருமியின் கருக்கட்டல்காலத்தினைக் கணிக்க ஆராய்ச்சியாளர் தவறியதால் இந்த இருவருக்குமூடாக எயிட்ஸ் வைரஸ் தனது பரவல் பயணத்தை ஆரம்பித்தது.

1981 இல் நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்கர்கள் பெருமளவில் உல்லாச விடுமுறையைக் கழிக்கச் செல்லும் ஹெயிட்டி (Haiti) தீவிலேயே இந்நோய் உருவாகியதாக கருதப்படுகிறது. ஆயினும் இவ்வாண்டில் ஜூனுக்கும் நவம்பருக்கும் இடையே நியூயோர்க், சான் பிரான்ஸிஸ்கோ, லொஸ் ஏன்ஜலிஸ் ஆகிய பிரபல நகரங்களில் ஏறக்குறைய 159 பேருக்கு எயிட்ஸ் நோய் காணப்பட்டது.

1983 இல் பிரான்ஸ் தேசத்தில் உள்ள 'பாஸ்ரர்' விஞ்ஞான கூடத்தில் (Institute Pasteur) 'லுக்மொன்டாக்னியர், (Luc montagnier's Group) என்பவரின் குழுவினரால் எயிட்ஸ் நோய்க்கிருமிகள் இனங் காணப்பட்டது. அப்போது இதை LAVவைரஸ் (Lymphadenopathy associated Virus) என்றழைத்தனர்.

1984 இல் அமெரிக்காவின் பெத்தீஸ்டர் (Bethesdausa) நகரத்திலுள்ள தேசிய சுகாதார நிறுவனத்தில் (National Ins itute of Health In Bethesda) டொக்ரர் ரொபேட் ஹலோ(Dr. Robest Gallo) வும் அவரது சகாக்களும் ஒருவகை வைரஸ் கிருமிதான் எயிட்ஸ் நோயை உண்டாக்குகிறது என்பதை உறுதிப்படுத்தினார்கள். அப்பொழுது இதற்கு HTLVIII வைரஸ் (Humant (Lymphotrophic Virus tyye III) என்று பெயரிடப்பட்டது சில சமயங்களில் ARV வைரஸ் (AIDS related Virus) எனவும் அழைக்கப்பட்டது.

1986 இல் இப்பொழுது உபயோகிக்கப்படும் HIV வைரஸ் (Human Immunodefi ciency Virus) என்றபெயர் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்பொழுது HIV வைரஸ் இல் இரண்டு உபபிரிவுகள் இருப்பதாக நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் மேற்கத்தைய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டதை HIVI என்றும், பின்பு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உபபிரிவை HIVII எனவும் அழைக்கிறார்கள்.

மனிதனது அறிவாற்றலுக்கு இதுவரை ஒரு தசாப்தத்திற்கு மேலாக சவால் விடுவதாக வரலாறு படைத்திருக்கும் எயிட்ஸ் வைரஸ் இனியும் தன் பயணத்தை தொடருமா? என்பது, தற்போது விஞ்ஞானிகளினதும் மருத்துவர்களினதும் கைகளில் இருந்து நழுவி உலக மக்களின் கைகளில் விழுந்துள்ளது. இதை இன்றைய உலகமக்கள் உணர்ந்து கொள்வார்களா?

— மூனா, வீனா —

தகவல்

# சாதனைகளால் சாதனை படைக்கும் கின்னஸ்

## கண்ணாடி, எஃகு, சைக்கிள், சவப்பெட்டி விமானம் உண்ணும் பிரான்சு நாட்டு மொன்சிர் மஞ்ரோ

சாதனைகள்- மிகப் பெரியதும், மிக நீண்டதும், அதி உயரமும். 150 ஆண்டுகள் உயிர் வாழ்தலும், ஆணியைத் தொடர்ந்து விழுங்குவதும் உலக சாதனைகள் வரிசையில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகின்றன.

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற பிலிப்பைன்ஸ் நாட்டு அன்னாசி மிகப் பெரியது. நிறை 17 இறாத்தல் 8 அவுன்ஸ். நீண்டகாலம் வாழ்ந்த மனிதர் ஒரு யப்பானியர். 120 ஆண்டுகளும் 237 நாட்களும் வாழ்ந்த அவரது பெயர் சிகிசியோ இசுமி. இந்தோனேசியாவில் ஜகோ விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 19 பேர் சேர்ந்து ஒருசைக்கிளை, ஒரே தடவையில் பொருத்தினர்.

எல்லாமே குதூகலம் சார்ந்தவை அல்ல. சாதனைகள் நிறைந்த கின்னஸ் வெளியீடு ஒரு மனப்பூர்வமான முயற்சி, 35 மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்நூல் அது தொடங்கப்பட்ட 1955 ம் ஆண்டிலிருந்து 65 மில்லியன் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. 1990 இல் முதல் முறையாக சோவியத் ஒன்றியத்திலும் கின்னஸ் புத்தகம் வெளியிடப்பட்டது.

இப் புத்தகம் ஸ்கொட்ஸ் நாட்டவர் மூவரால் உருவாக்கப்பட்டது. 1951 இல் கின்னஸ் வடிசாலையின் பொறுப்பாளரான கியூ பீவர் ஒரு வேட்டைக்குச் சென்றிருந்தபோது, தான் பார்த்த பொன்நிற கடற் பறவை ஐரோப்பாவிலேயே வேகம் கூடியபறவையோ என எண்ணினார். இத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்கும் ஒரு புத்தகம் உருவாக அப் பறவை காரணமாயிற்று. 1955 இல் கின்னஸ் புத்தகம் உதயமாயிற்று. மூன்று மாதங்களில் அவை யாவும் விற்பனையாகிவிட்டன. மனிதர் அதிதிறமையிலும் மிகப் பெரியதிலும் ஆகச் சிறியதிலும் ஆர்வம் கொண்டனர்.

கின்னஸ் வெளியீட்டு நிறுவனம் பெறும் ஆண்டு வருமானம் 12.6 மில்லியன் அமெரிக்க டொலர் எனினும் அதன் தலைமை அலுவலகம், இலண்டனில் வடக்கே என்பீல்ட் எனுமிடத்தில் ஒரு சாதாரண, விளம்பரமற்ற இரு மாடிக்கட்டிடத்தில் உள்ளது. அங்கு கடமையாற்றும் 40 பேரில் நான்கு பேர் மட்டும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய சாதனைகள் பற்றிய விண்ணப்பங்களை பரிசீலிக்கும் உரிமையுடையவர்கள்.

அது சுலபமான வேலையல்ல. கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுவிட்ட 15000 சாதனைகளில் 3000 ஆண்டு தோறும் வெல்லப்படுகின்றன. சிலரால் மட்டும் தம் சாதனைகளைக் காப்பாற்ற முடிகிறது. றொனால்ட் றீகனின் முன்னாள் மனைவி ஜேன் வைமன் தன்சினிமா வரலாற்றில் நீண்டநேரம் முத்தமிட்டு சாதனை புரிந்தமை போன்றவற்றை இன்னும் யாரும் வெல்லவில்லை. கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுவது எவ்வளவு கடினமோ அவ்வளவுக்கு அதிலிருந்து வெளியேறுவதும் கடினமே. என்பீல்ட் நிறுவனப் பணியாளர் தினமும் 200க்கு மேற்பட்ட கடிதங்களுக்குப் பதில் அனுப்புகின்றனர். அவற்றில் கால் பங்கு பத்து வயதுச் சிறுவர்களிடமிருந்து வருகின்றன. அவர்கள், தம் பெரிய நாய்க்குட்டிக்கு கின்னஸ் புத்தகத்தில் இடம்கோரியும் தம் பாட்டி, பாட்டன்மாரின் பெயர்களைப் பதிவு செய்யக் கேட்டும் தம் வீட்டில் வளரும் உலகின் அதிக கிளைகளைக் கொண்ட மரங்களை சாதனையாக எடுத்தும் எழுதுகிறார்கள்.

பிரசுரத்திற்குரியவை பற்றி முடிவெடுக்கும் உரிமை கின்னஸ் புத்தகத்தின் ஆசிரியர், 39 வயதான டொனால்ட் மைக்பார்வன் உடையது.

(15ம் பக்கம் பார்க்க)

# அறிவியல் அணுகுமுறை

இ. சிவானந்தன்

அறிவியல் பூர்வமாக அனைத்தையும் அணுகுகின்ற
ஒரு நெறி பழக்கமாக ஒருவரில் அமையும் போது,
சிறுமைகள் சிதையும் அப்போ செல்நெறி செழுமை சேரும்,
சரிநிகர் சமானமான சமூகம் ஒன்று இங்கே தோன்றும்.

வண்டிலைப் பின்னே விட்டு மாடுகள் முன்னே போனாற்
கொண்டுபோய்ச் சேர்த்தல் கூடும் குவியலாய்ப் பாரம் எல்லாம்;
வண்டிலை முன்னே விட்டு மாடதைப் பின்னே பூட்டின்
என்றுதான் வண்டில் ஓடும், எப்படி உய்தி காணும்?

மனம் எனும் தோணி ஏறி மகிழ்வுடன் விருப்பம் பற்றி
மனம் போன போக்கிற் செல்லல் மனதையே குழப்பிப் போடும்
மாறாத எண்ணம் கொண்டே மாண்டுபோம் மனிதர் செய்கை:
மானிடம் அழிந்துசாக மலடுகள் ஆக நேரும்.

செயல்மூலம் செய்யும் வேளை சிந்தனைச் சிறப்பால் ஆகி
முன்கூட்டி மனதிற் கொண்ட முதிர்விலாக் கருத்துக் கோலம்
கலங்கரை விளக்கமாகக் காட்டலாம் பாதை, ஆனால்
முடிந்ததோர் கருத்தாய்க் கொண்டால் முற்றுமே குழம்பிப் போகும்.

முதலிலே தீர்மானத்தை முடிந்ததோர் முடிவாய்க் கொள்வோர்,
முதல்அடி சறுக்கக்கண்டு மூர்ச்சையாய்ப் போவதுண்டு.
உரியதாய்க் கிரமமாய் முன் னுரிமைகள் தெரிந்து செய்வோர்,
பெரியதோர் தாண்டல்கூடப் பிரச்சினை இன்றிப் பாய்வர்.

தகவல்கள் சேர்த்துக் கொண்டு, தரவுகள் தெரிவு செய்து,
தகுதிகள் உரைத்துப் பார்த்துத் தக்கவை ஒழுங்கு கூட்டி;
கருமங்கள் தொடர் வகுத்துக் காரியம் ஆற்றும் பண்பு
சிரமங்கள் சிக்கல்இன்றிச் செயல்களிற் செம்மை சேர்க்கும்.

புலன்களை அடக்கும் யோகி, புலன் வழி அலையும் போகி,
நிலம்தனில் வேண்டாம்; வேணும் புலன்களின் கட்டுப்பாடே.
புலன்வழிப் பயிற்சி பெற்றே புலன்களைக் கட்டுப்பாட்டின்
பயன்தரு அளவிற் சேர்க்கும் பண்பினைக் கற்றுக் கொள்வோம்.

கேட்பவை மறந்து போவோம், பார்ப்பவை நினைவிற் கொள்வோம்
செய்பவை விளக்கம் சேர்க்கச் செயன்முறை உணர வைக்கும்
நோக்கலை முடித்தபின்பு உய்த் தறிதலில் ஈடுபட்டால்
வாய்க்குமே அரிய பேறு வளரும் அறிவியல் நோக்கு.

□□□□

# பனிநீர் படிதலும் பனிப்புகார் எழுதலும் எமது வானிலையில் நிகழும் விதம்

மாசிப்பனி மூசிப்பெய்யும் என்ற தமிழில் உள்ள பழமொழி புவியியல் தொடர்பான தமிழர் சிந்தனையைக் காட்டுகின்றது. பழந் தமிழ் இலக்கியங்களில் முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என்ற காலப்பாகுபாடுகளும் உள்ளன. இவையாவும் பனி என்ற சொல்மூலம் பனிநீர் படிதற்செய்முறையையே குறிக்கின்றன. உண்மையில் பனி பெய்வது இல்லை. பனிநீர் புவிமேற்படையில் மெதுவாகப்படிதலே எமது வானிலையில் நிகழும் செய்முறையாக உள்ள தன்மையை காணமுடிகின்றது.

இரவு வேளைகளிற் தெளிந்த, முகில்கள் அற்ற வானமும், காற்று அசைவற்ற சூழ்நிலையும், வளிமண்டலத்தில் நீராவியின் அளவு போதுமானதாக இருப்பதும், பனிநீர்படிதற்கு சாதகமான காரணிகளாக உள்ளன. வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றைப் பெற்று அதனால் மழை பெறும் இலங்கையின் உலர்வலயப் பிரதேசங்களில் தை, மாசி, பங்குனி, ஆகிய மாதங்களில் கூடிய அளவு நாட்கள் பனிநீர் படிதற்கான சாதகமான வானிலை கொண்ட நிலமை காணப்படுகின்றது. இதனாலேயே "மாசிப்பனி" என்ற வழக்கும் ஏற்படலாயிற்று.

புவியானது இரவில் பகலிற் பெற்ற சூட்டை விரைவாக இழக்கின்றது. அதனால் இரவிற் குளிரடைவதும் பகலிற் சூடாக இருப்பதும் பொதுவான நிகழ்வாக உள்ளது தெளிந்தவானம் காணப்படும் போது புவியில் இருந்து இரவில் வீசப்படும் புவிக்குரிய கதிர்வீசல், விரைவாக நேரடியாகவே வளிமண்டலத்தை அடைகின்றது. இந்நிலையில் காற்றும் விரைவாக வீசாதுவிடில் பூமி மேலும் விரைவாகவே குளிரடைகின்றது. இத்தகைய நிலையில் வளிமண்டலக் கீழ்படையிற் காணப்படும் நீராவி மெதுவாகப் பூமியிலும் அதனுடன் சேர்ந்து குளிரடையும் தாவரங்களிலும் காணப்படும் பல்வேறு முனைகளிலும் நீர்த்துளியாகப் படிகின்றது இதையே "மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே" எனப் புலவர்கள் பாடினார்கள்.

இவ்வாறு பனிநீர்படிவதேயன்றி உண்மையில் பனி பெய்வது இல்லை. என்பது இப்போது தெளிவாகின்றது. இத்தகைய பனிபடிதல் அதிகாலையிற் சூரியன் வருகின்றவரையும் நடைபெறுகின்றது. சூரியன் வந்தவுடன் பனிப்புகார் கண்ணிற்கு தெரிகின்றது. நல்ல தெளிவான நிலாவேளையில் இரவிலும் லேசாகப் பனிப்புகார் கண்களுக்கு தெரிவது உண்டு: இனி கடற்கரையோரத்தை அண்மிய பகுதிகளில் தரைக்காற்று இராவேளையில் கடலை நோக்கி அசைவதனால் பனிநீர்படிதல் பாதிப்படைகின்றது. இதனாலேயே ஒப்பீட்டளவில் யாழ்குடாநாட்டைவிட வன்னிப் பிரதேசத்தில் பனிநீர்படிதற் செய்முறை கூடுதலாக காணப்படுகின்றது. வவுனியாப் பிரதேச வழக்கிலே வெண்பா என்றசொல் பனிப்புகாரைக் குறிக்கப் பயன்படுகின்றது. எனினும் எமதுமொழியில் பனி என்ற ஓரேசொல் பனிநீர் படிதலையே குறிக்கின்றது. எஸ்கிமோவரின் வளர்ச்சியடையாத மொழியில் சூழற்கேற்ப பனியின் வெவ்வேறு நிலைகளை சுட்டிக்காட்ட முப்பதிற்கு மேற்பட்ட சொற்கள் வழக்கில் உள்ளனவாம். ஆங்கிலத்தில் ஏழு வரையிலேயே காணப்படுகின்றன.

—பூமகன்

## காற்றுக்கும் நிறை உண்டு

காற்றுக்கு நிறை உண்டா?
இக்கேள்விக்கு 'ஆம்' என்பதுதான் பதில்

உயிரணுக்களைக் கொண்டுள்ளனவான நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, நீராவி போன்ற பலவற்றின் சேர்க்கையே காற்று உயிரணுக்களுக்கு நிறை உண்டு. எனவே காற்றுக்கும் நிறை உண்டு. இதை ஒரு சுலபமான பரிசோதனை மூலம் அறியலாம்.

காற்று இல்லாத ஒரு பலூனையும் ஒருசிறு கயிற்றுத்துண்டையும் நிறுத்து அந்த நிறையைக் குறித்துக் கொள்ளுங்கள், பின்னர் பலூனுக்குக் காற்றடித்து அக்கயிற்றுத்துண்டால் அதைக் கட்டிவிட்டு நிறுத்துப் பாருங்கள், இப்போது நிறை சிறிது அதிகரித்திருக்கும். அதிகரித்த நிறையே காற்றின் நிறை.

ஒரு லீற்றர் காற்றின் நிறை 1.3 கிறாம் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது.

எங்களுக்கு மேலே பலநூறு கிலோ மீற்றர் உயரத்துக்குக் காற்று நிறைந்திருப்பதனால் அதன் அமுக்கம் கூடுதலானது. 6 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவில் காற்றின் அமுக்கம் 7 கிலோ கிறாம் நிறையுடையது என்பர். இதன் படி எங்கள் உடலின் மீதான காற்றமுக்கம் மிக அதிக பாரமானது. இந்த அமுக்கத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் எங்கள் உடலின் இரத்தோட்டம் அமைந்திருப்பதால் நாங்கள் அதை உணர்வதில்லை.

இரத்தோட்டத்தின் தாக்கத்திலும் பார்க்கக் காற்றமுக்கத்தின் தாக்கம் குறையும்போது மூக்கு அல்லது காது வழியாக இரத்தம் வெளியே தள்ளப்படும் மலைஉச்சியைநோக்கி ஏறிச் செல்லும் போது இவ்வாறு ஏற்படலாம். உயரத்துக்குச் செல்லச் செல்லக் காற்றமுக்கத்தின் தாக்கம் குறைவதே இதற்குக் காரணம்.

— சிவா

உருவகம்

# பொய்யுக்கு சாவுமணி!

நாக பத்மநாதன்

''மனிதர் வருகினம்! மனிதர் வருகினம்!''

பயத்துடன் இவ்விதம் கூறிய இளம் உருவத்தைப் பார்த்து மூத்த உருவம் சிரித்தது!

அது அச்சத்தை எப்போதோ விட்டொழிந்த நிலையில் முன் சென்று கொண்டிருந்தது.

மீண்டும் சிறியது குரல் கொடுத்தது.

''மனிதர் வருகினம்!''

பெரிய உருவம் அழுத்தமாய்க் கேட்டது- ''ஏன் நீ மனிதரைக் கண்டு பயப்படவேண்டும்? எங்கள் பெயர் என்ன? அதை முதலிற் சொல்.''

பதில் வரவில்லை.

''மீண்டும் சொல்லுகிறேன்-எங்கள் பெயர் பொய்! பொய்! நாங்கள் காட்டில் வாழ முடியாது. குருவிகளின் நாக்கிலும் வாழமுடியாது! எமக்குத் தஞ்சம் மனிதர்தான். எங்கள் விளைநிலம் அவர்களே! விளங்குகிறதா?''

உரையாடிக் கொண்டே அவை ஒரு நகரின் நுளை வாயிலை அடைந்தன.

வாயிற் காவலன் அங்கு நின்றான். சந்தேகப் பார்வையுடன் அவன் கேட்டான்-

''நீ பொய் அல்லவா?''

பொய் புன்னகை பூத்தது. ''இல்லை'' என ஆறுதலாகத் தலை அசைத்தது!

'' சரி, நீங்கள் போகலாம் '' என்றான் காவற்காரன்!

இரண்டும் நகருள் நுழைந்தன. பூட்டிக் கிடந்த ஒரு பொதுக் கட்டிடத்துள் அவை அமர்ந்தன. பெரிய பொய்யின் உபதேசம் தொடர்ந்தது. எனினும் ஏதோ பிரியாவிடைப் பேச்சைப் போல அதன் குரல் இருந்தது.

''எனக்குத் தெரிந்த அளவில் நீ மூன்றாவது சந்ததி. என் முன்னோர் சாதகம், சாத்திரம், மூட நம்பிக்கை, கேள்வி கேட்டறியாத கீழ்ப்படிவு என்பதன் மூலம் மக்களை ஆண்டனர், ஆட்டிப் படைத்தனர்!

நான் எழுந்த போது மனிதரின் சமுதாய உணர்வு மேலோங்கி நின்றது. இதற்கேற்ப என்னை நான் மாற்றிக் கொண்டேன். வான ளாவப் பேசுவதைக் கற்றுக் கொண்டேன். இதனை மெய் என நம்பி மனித கூட்டம் என்னைத் தோள்மேல் சுமந்ததை நினைக்கச் சிரிப்பு வருகிறது! ஆனால்...''

''சொல்லுங்கள்'' என்றது இளைய பொய்.

''ஆனால், விழிப்பு அலை என ஒன்று இடையிடையே மனித சமுதாயத்தில் ஏற்பட்டு விடுவதுண்டு. அதனால் எம் பேச்சு மேடையானது முறிந்தது! என் செல்வாக்குச் சாய்ந்தது! எனினும் என் பட்டறிவு பெரிது! சிந்தித்தேன்; மீண்டும் பொய்மை நீடுழி நிலைக்க வழி வகுத்து விட்டேன்! இனி இளம் சமுதாயம் கண்மூடி நிற்கும்! அவர்களின் அறிவை நீ ஆளப்போகிறாய்!'' என்றது அந்த அனுபவப் பொய்!

'' எதைக் கூறுகிறீர்கள்? '' என ஆவல் தலைக்கேறியபடி கேட்டது இளம் பொய்.

''பாட நூல்களை, அப்பனே! அதிலும் வரலாற்று நூல்களை! என்கை கொண்டு எழுதிய இவை உண்மையை விளம்பமாட்டா! மண்ணின் வளத்தை அறியாத - தமது முன்னோரின் வரலாற்றை உணராத - எந்த இளம் சமுதாயம் வாழும்?''

''அவை வாழ மாட்டா? வாழமாட்டா! எனக் கூவின இரண்டும் சேர்ந்து!

அவ்வேளை இவை எண்ணாத ஒரு புரட்சிப் பேரலையின் முழக்க ஒலி தூரத்தே கேட்டது! விடிவின் கதிர்கள் வான் எங்கும் எழுந்தன! சிந்தனைப் புரட்சி! விடுதலைப் பேரொலி! என மண்ணும் விண்ணும் கனைத்தன! அங்கு-புதிய வருங்கால உதயம் தெரிந்தது!

அந்த விடிவின் தெளிவிலே உண்மை பளிச்சிட்டது! புதிய நாடொன்று பிறந்து கொண்டிருந்தது. 'ஐயோ'' என்ற ஈனக் குரல் கேட்டது, அது பொய்யின் கடைசிக் குரல்.

# பண்டமாற்றின் அளவுகோல்

எங்களுக்குத் தேவையான பொருட்களைக் கடைகளில் வாங்குகிறோம். அவற்றின் பெறுமதியைப் பணமாகக் கொடுக்கிறோம். அதாவது, பணம் கொடுத்துப் பொருட்களை வாங்குகிறோம்.

பணம் புழக்கத்துக்கு வரத் தொடங்காத பண்டைக் காலத்தில் பொருட்களைக் கொடுத்தே பொருட்களை வாங்கினார்கள். ஒருவர் தன்னிடமுள்ள ஒரு பொருளைக கொடுத்து அதற்குப் பதிலாகத் தன்னிடம் இல்லாததும் தனக்குத் தேவையானதுமான வேறொரு பொருளை வாங்குவார். இதுவே பண்டமாற்று எனப்பட்டது.

கண்மூடித்தனமாகப் பொருட்களை மாற்றிக்கொள்ள முடியாது.

ஒரு சிறிய சத்திக்காகத் தங்கச் சங்கிலியொன்றைக் கொடுக்கலாமா?

பொருட்களின் பெறுமதியைக் கண்டறிந்து அதன் அடிப்படையிலேயே பண்டமாற்று மேற்கொள்ளப்பட்டது.

பெறுமதியை அறிவதற்குப்பயன்படுத்தப்பட்ட அளவுகோல் யாது?

மனித உழைப்பைக் கொண்டே பெறுமதி கணிக்கப்பட்டது. ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட மனித உழைப்பு நாட்களே பெறுமதியைக் கணிக்கும் அளவுகோலாகப் பயன்பட்டன. உதாரணமாக ஒரு மேசையை எடுத்துப் பார்ப்போம். மரத்தை தறிப்பதற்கும், அதை வெட்டிப் பலகைகள் அரிவதற்கும், அப் பலகைகளைக் கொண்டு அந்த மேசையைச் செய்வதற்கும் மொத்தமாக எத்தனை மனித உழைப்பு நாட்கள் தேவை என்பதைக் கணக்கிட்டு அந்த மேசையின் பெறுமதி கணிக்கப்பட்டது.

ஒவ்வொரு வேலைக்கும் எத்தனை மனித உழைப்பு நாட்கள் தேவை என்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான, கணிப்பீடொன்று அன்றைய சமுதாயத்தில் இருந்தது.

உலோகங்களைத் தோண்டி எடுப்பதற்கு அதகளவு மனித உழைப்பு நாட்கள் தேவை என்பதால் அவையே அதிக பெறுமதியானவையாகக் கருதப்பட்டன. தங்கம் எல்லா உலோகங்களிலும் பெறுமதி கூடியதாக இருந்தது.

ஒரு பொருளை வாங்குவதற்கு அதே அளவு பெறுமதியுள்ள இன்னொரு பொருளைக் கொடுக்க வேண்டும். உலோசங்கள் சிறிய அளவில் கூடுதலான பெறுமதியைக் கொண்டிருப்பவை. அதிக பெறுமதியான உலோகத்தை அதே யளவு பெறுமதியான மற்றைய பொருட்களிலும் பார்க்கச் சுலபமாக எடுத்துக் செல்ல முடியும். இதனால் உலோகங்கலைக் கொடுத்துப் பொருட்களை வாங்கும் வழக்கம் ஏற்பட்டது.

முதலில் உலோகங்களை நிறுத்துக் கொடுத்தே பொருட்களை வாங்கினார்கள். காலப்போக்கில் ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள உலோகத்தை வெட்டி எடுத்துப் பயன்படுத்தத் தொடங்கினர். அவ்வாறு வெட்டப்பட்ட உலோகத் துண்டுகளின் நிறைக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் அரச முத்திரை பொறிக்கப்பட்டது. அவையே நாணயங்கள் எனப்பட்டன.

இவ்வாறாக நாணயங்கள் முதன் முதலில் புழக்கத்துக்கு வந்தன.

இந்த நாணயங்கள் ஒவ்வொன்றும் எத்தனை மனித உழைப்பு நாட்களைக் கொண்டவை என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு பொருளினது பெறுமதியும் இத்தனை வெள்ளி நாணயம் அல்லது இத்தனை தங்கநாணயம் எனக் கணக்கிடப் பட்டது.

இவ்வாறாக முதன் முதலில் பொருட்களுக்கு விலைகள் ஏற்பட்டன.

—சிவா சுப்பிரமணியம்

**சாதனைகளால்..**

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் வேக ஓட்டத்தில் சாதனை புரியவிரும்புகிறவர்களிடமிருந்து எண்ணற்ற விண்ணப்பங்கள் வந்து சேருகின்ற போதிலும், அவை ஆபத்தான முயற்சிகள் என்று காரணங் காட்டி மறுக்கப்படுகின்றன. அதேபோன்று சின்னஞ்சிறு வான்குடை மூலம் குதித்தும் உயரத்தில் மிக மிக மெல்லிய கம்பியில் நடந்தும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற விரும்பும் விண்ணப்பங்கள் மறுக்கப்படுகின்றன.

மறக்கமுடியாத வரலாற்றுப் பெறுமதிமிக்க சாதனை மைக்கல் லோடிட்டோவினுடையது. இவரது மறுபெயர் மொன்சீர்மஞ்ரோ. பிரெஞ்சுக்காரர். 1950 இல் பிறந்த இவர் ஒன்பது வயதிலிருந்து கண்ணாடி எஃகு போன்றவை தொடக்கம் மார்ஸ்மலோ வரை விரும்பி உண்டுவருகிறார். 1966 லிருந்து அவர் உட்கொண்டவற்றில் பத்து சைக்கிள்கள் ஒரு தள்ளுவண்டி, ஏழு தொலைக்காட்சிப் பெட்டிகள், ஆறு மெழுகுவர்த்திப் பீடங்கள், ஒரு சவப்பெட்டி, கைப்பிடிகள் உட்பட, ஒருசெங்கு — 150 ரக விமானம் (விமானியைத்தவிர) ஆகிய அடங்கும்.

சாதனைகளில் விளம்பர முகவர்கள் அக்கறை கொள்கிறார்கள். சாதனையாளரை விற்பனைப் பொருட்களில் பயன்படுத்துகிறார்கள்.

—உதவி. ரீடேர்ஸ் டைஜெஸ்ற்

வரலாறு

# தமிழில் மேனாட்டு மருத்துவக் கல்வியின் தந்தை கிறீன் வைத்தியர்

மானிப்பாயில் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கு எதிரே பெரு வீதியின் கிழக்கே தனியார் மருத்துவ நிலையம் ஒன்று உள்ளது. இந்த மருத்துவ நிலையத்துக்குக்' கிறீன்நினைவு மருத்துவ நிலையம்'' என்று பெயர்.

அமெரிக்கரான சமுவல் பிஸ்குக் கிறீன் (Samuel Fisk Green M. D.) என்ற மருத்துவர் 1847 ஆம் ஆண்டு இதனை நிறுவினார் கிறீன் வைத்தியர் மதம் பரப்பும் நோக்குடன் மருத்துவ சேவை செய்ய இங்கு வந்தார். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் அவர் இங்கு பணியாற்றினார். தமிழ்க் காதலராக மாறிய அவர் தமிழில் அறிவியலைப் பரப்ப எண்ணினார். அறிவியலின் ஒரு கூறான மருத்துவத்தைத் தமிழ் மொழிமூலம் பரப்புவதையே தமது குறிக்கோளாகக் கொண்டார். அதன் மூலம் 'தமிழில் மேல் நாட்டு மருத்துவக் கல்வியின் தந்தை' என்ற பெரும் புகழைப் பெற்றார்.

கிறீன் வைத்தியர் யாழ்ப்பாணம் வந்தபோது தமிழரிடம் மருத்துவ முறை ஒன்று வளர்ந்த நிலையில் இருந்தது. ஆனால், யாழ்ப்பாணப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் அந்த மருத்துவமுறை வளர்ச்சியும் பயிற்சியுமின்றித் தேங்கிக் கிடந்தது. மேல்நாட்டு மருத்துவத்தைத் தமிழிற் கற்பித்தால் தமிழரிடையே புதியமருத்துவமுறைகள் பரவி, தமிழரின் மரபுவழி முறையிலுள்ள குறைபாடுகள் நீங்கும் எனக் கிறீன் வைத்தியர் எண்ணினார்.

கிறீன் வைத்தியர் 1848 ஆம் ஆண்டு முதல் மானிப்பாயில் மேல்நாட்டு மருத்துவத்தை ஆங்கில மொழி மூலம் தமிழ் மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார். அவர் அமெரிக்காவிலேயே தமிழ் படிக்கத் தொடங்கியிருந்தார். இங்கு வந்த பின்னும் அவர் தமிழைத் தொடர்ந்து படித்தார். நோயாளர்களோடு தமிழில் உரையாடினார். அவர்கள்பேச்சில் இடம்பெறும் மருத்துவச் சொற்களைக் குறித்துக் கொண்டார். அவற்றுக்கு ஒத்த ஆங்கிலச் சொற்களையும் எழுதிக் கொண்டார். இதனால் ஆங்கில தமிழ் மருத்துவக் கலைச்சொல் அகராதி ஒன்று உருவாகி வளர்ந்து கொண்டிருந்தது.

1850 ஆம் ஆண்டு கிறீன் வைத்தியர் அங்காதி பாதம் என்ற ஆங்கில மருத்துவ நூலைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். 1852 ஆம் ஆண்டு இந்நூலை அச்சிட்டு வெளியிட்டார் 1848 ஆம் ஆண்டு பீற்றர் பேர் சிவல் ஐயரின் மேற்பார்வையில் விவிலியத்தை ஆறுமுக நாவலர் மொழிபெயர்த்து முடித்தார். அவ்வாண்டில் அது அச்சிட்டு வெளியிடப்பட்டது. அதற்கு நான்கு ஆண்டுகளுக்குப்பின் அறிவியல் துறையின் முதலாவது நூலாகிய அங்காதி பாதம் தமிழில் வெளியிடப்பட்டது. இதன் மூலம் 'அறிவியல் தமிழின் தந்தை' என்ற பெருமைக்கும் கிறீன் உரியவராகிறார். இந்நூல் ஈழத்திலும் தமிழகத்திலும் வரவேற்பைப் பெற்றது. இதனால் மகிழ்ந்த கிறீன் தமது முயற்சியைத் தொடர்ந்தார்.

மொழிபெயர்ப்பில் கிறீன் வைத்தியரின் மாணவர்கள் அவருக்குப் பெருந்துணை செய்தனர். வட்டுக்கோட்டையிலிருந்த பல்கலை நிறுவனத்தில் ஆங்கில மொழிமூலம் பல ஆண்டுகள் உயர்கல்வி பெற்ற மாணவர்களுள் முதன்மை பெற்றவர்கள் ஆங்கில மருத்துவக் கல்லூரியிற் சேர்க்கப்பட்டனர். வட்டுக்கோட்

அரி. சதாநந்தன்

டைக்கு வருமுன்னரே இவர்கள் மரபுவழியில் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப பயின்றிருந்ததால் இரு மொழியும் வல்லாராய் விளங்கினர்.

தொடக்கத்தில் ஒரு நூலைக் கிறீன் வைத்தியரும் மாணவர்களும் தனித்தனியாகத் தமிழில் மொழி பெயர்த்தனர், பின் மொழி பெயர்ப்புகளை ஒப்பிட்டு வேண்டிய திருத்தங்களைச் செய்தனர் இதன் பின் நூலை அச்சிட்டு வெளியிட்டனர். பரராசசேகரம், செகராசசேகரம், அங்காதி பாதம் முதலிய மருத்துவ நூல்களைப் பெற்றிருந்த தமிழுக்கு கிறீன் வைத்தியரும் அவர் மாணவர்களும் தமிழில் வெளியிட்ட மேனாட்டு மருத்துவ நூல்கள் புதிய செல்வமாகச் சேர்ந்தன.

தமிழிலே மேல் நாட்டு மருத்துவம் என்ற குறிக்கோளுடன் செயற்பட்ட கிறீன் வைத்தியரின் கனவு நனவாகும் வாய்ப்பு ஏற்பட்டது. 1855 இல் அமெரிக்காவிலிருந்து ஈழத்து மிசனரிகளின் மதப் பணியை மதிப்பிட அண்டசன் தொம்சன் ஆணைக்குழு இலங்கை வந்தது. பொதுக் கல்வியும் மருத்துவக் கல்வியும் தமிழ் மொழி மூலம் நடைபெற வேண்டுமென அண்டசன் - தொம்சன் குழு பரிந்துரை செய்தது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கிறீன் வைத்தியர் 1855 ஆம் ஆண்டு மானிப்பாயில் தமிழ் மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினார். ஆங்கில மொழி மூல மருத்துவக் கல்லூரி 1864 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. தமிழ் மொழிமூல மருத்துவக் கல்லூரி 1900 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைபெற்றது.

தமிழ் மொழி மூல மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவருக்கும் தமிழில் மேனாட்டு மருத்துவ நூல்கள் தேவைப்பட்டன. பெரியதம்பி, சுவாமிநாதர் அப்பாப்பிள்ளை, வைத்திலிங்கம் முதலியோர் ஆங்கில நூல்களை மொழிபெயர்க்கவும் தமிழில் மருத்துவக் கலைச் சொற்களை உருவாக்கவும் துணை புரிந்தனர்.

கிறீன் வைத்தியர் விடுமுறையில் அமெரிக்கா சென்றபோது பெரியதம்பிஎன்ற டன்வதர் (Dr. J. Danforth) மருத்துவக் கல்லூரியைப் பொறுப்பேற்று நடத்தினார். இரணவைத்தியம் என்ற நூலைத்தமிழில் பெரியதம்பி மொழிபெயர்த்து முடித்திருந்தார். இப் பெரும் பணிக்காக இவருக்கு மருத்துவக் கலாநிதி M. D. பட்டம் வழங்கப்படவேண்டுமெனக் கிறீன் வைத்தியர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்தார். இவ்வாறு பட்டமளிப்பது தமிழில் பல மருத்துவ நூல்கள் தோன்ற வழிவகுக்கும் என அவர் எடுத்துக் காட்டியிருந்தார். இவை மொழி பெயர்ப்பு நூல்களாக அமையாது யாழ்ப்பாணமரபுகளை உள்ளடக்கிய தழுவல் நூல்களாக (Adaptations) அமைந்தன.

1872 இல் கிறீன் வைத்தியர் அமெரிக்கா திரும்பினார். அரசாங்க மருத்துவராகப் பணியாற்றிய தமது மாணவர் வைத்திலிங்கத்தைத் (Daniel Waithlingam Chapman) தமது கல்லூரிப் பேராசிரியராகச் சேர்த்துக் கொண்டார். கல்லூரியைச் சிறப்புடன் நடத்தப் பயிற்சியளித்தார். கிறீன் வைத்தியர் தொடங்கிய தமது பணிகளை நிறைவு செய்ய யாழ்ப்பாணம் வர விரும்பிய போதிலும் அதற்கான இசைவு அவருக்குக் கிடைக்கவில்லை. மருத்துவக் கல்லூரி அதிபராகவும் உடலமைப்பியற் பேராசிரியராகவும் வைத்திலிங்கம் சிறப்புடன் பணியாற்றினார். கலைச் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு நூல் வெளியீடு ஆகிய பணிகளை அவர் தொடர்ந்து நிறைவேற்றிப் புகழ் பெறறார்

கிறீன் வைத்தியரும் அவருடைய மாணவர்களும் 1852 ஆம் ஆண்டு முதல் 1884 ஆம் ஆண்டுவரையுள்ள முப்பத்திரண்டு ஆண்டுகளில் ஏறத்தாள 5000 பக்கங்களைக் கொண்ட பல தமிழ் மருத்துவ நூல்களை அச்சிட்டு வெளியிட்டனர். அச்சுக்கலையின் தளர் நடைப் பருவத்தில் இது மிகப்பெரிய சாதனையாகும். இந்நூல்கள் ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகத்திலும் கேரளத்திலும் கூடச் செல்வாக்குப் பெற்று விளங்கின.

கிறீன் வைத்தியர் தமிழில் முன்னோடியாக மேல்நாட்டு மருத்துவத்தைக் கற்பிக்கத் தொடங்கி நூற்றி நாற்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், இன்றும் பல்கலைக்கழக மட்டத்தில் தமிழில் அறிவியல், தமிழில் மேனாட்டு மருத்துவம் என்பவை கனவாய்' கற்பனையாய் உள்ளன

'தமிழில் மருத்துவம்' என்ற செயற்பாட்டைக் கிறீன் வைத்தியர் தொடங்கிய 200 ஆம் ஆண்டு 2052இல் நிறைவடையும். அப்போதாவதுதமிழில் மருத்துவம் என்ற கருத்து - கனவு - நனவாகுமா? அதற்காக, இப்பொழுதே நாம் திட்டமிட்டுப் பணி தொடங்குவோமா? தொடர்வோமா?

குறிப்பு - மாரீச் - ஏப்ரல் இதழில் பிரசுரமான ,நிறம் மாறும் இலைகள்' கட்டுரையை எழுதியவரும் திரு. அரி. சதானந்தன் என்பதை குறிப்பிட விரும்புகிறோம். அந்த இதழில் இவரின் பெயர் தவற விடப்பட்டமைக்கு வருந்துகிறோம்.

# வலையில் சிக்கும் சந்தர்ப்பவாதிகள்

நாட்டுப்பற்றற்ற, வியாபாரத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட பலர் நம்மிடையே இருக்கின்றார்கள்.

காட்டிக்கொடுக்கும் நோக்கம் அடிப்படையில் இல்லா விடினும் தமது வியாபார நலனுக்காக எதனையும் செய்யும் துணிவு பெற்றவர்கள். இவர்கள் எதிரியின் வலையில் எளிதில் விழுபவர்கள்!

இன்றைய போராட்ட காலத்தில் எதிரியை விட பயங்கரமானவர்கள்.

தேசத்துரோகம் புரிந்து பிடிபட்ட சிலரைப்பற்றிய தகவல்கள் அண்மையில் செய்தித் தாள்களில் வெளிவந்தமை ஞாபகம் இருக்கலாம்.

இவர்களில் அநேகர் வியாபார விடயமாக அடிக்கடி கொழும்பு சென்று வருபவர்கள். எவ்வாறு இவர்கள் துரோகிகளாயினர்?

இந்த நிலாமுற்றத்தில் இதைப்பற்றி கொஞ்சம் ஆராய்வோம்.

எதிரிகளை விட துரோகிகளே மிகவும் மோசமானவர்கள். எந்தவொரு விடுதலைப் போராட்ட மண்ணிலும் எப்படியோ துரோகிகள் உருவாகி விடுகின்றார்கள்.

சொந்த மண்ணையும் சொந்த மக்களையும் எதிரிக்குக் காட்டி கொடுத்து, அதன் மூலமாகக் கிடைக்கும் வசதிகளில் சுகம் அனுபவிக்கும் இத்துரோகிகள் பலவிதமான காரணிகளால் உருவாக்கப்படுகின்றனர்.

பல அரசியல் குழுக்கள் மக்களால் அன்னியப்படுத்தப் பட்டதும் எதிரியுடன் போய் நின்று கொண்டன. தமது சொந்த அரசியல் வேட்கைகள் தோல்வியுற்றதும் துரோகத்தனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒன்று.

மற்றது - மக்கள் நடுவில் இருந்து தோன்றும் துரோகத் தனம்

சுதந்திரப் போராட்டத்தினால் சூழ்ந்து கொண்டுள்ள நெருக்கடிகள் மத்தியிலும் மண்பற்று காரணமாக, இந் நெருக்கடிகளையெல்லாம் தாங்கிக்கொண்டு வாழும் மக்கள் கூட்டமொன்றும் இம் மண்ணில் உண்டு.

சுதந்திரம் வேண்டும். ஆனால் அதற்காக போராடவோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவோ விரும்பாத சிலரும் இருக்கின்றனர்.

இன்னொரு வகையினர் 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, என்கிற மனோபாவத்தைக் கொண்ட சந்தர்ப்பவாதிகள். இவர்கள் எந்த சக்தி ஆதிக்கத்திலுள்ளதோ அதனோடு தம்மை இணைத்துக்கொண்டு சுயலாபம் தேட முனைபவர்கள்.

அதிகமாக இக் கூட்டத்தினரிடமிருந்தே துரோகிகள் உருவாகின்றார்கள். சொந்த நலனுக்காக எந்தவழிகளையும் தேர்ந்தெடுக்கும் இவர்கள் எதிரியின் வலையில் விழ்ந்து சொந்த மண்ணையும், சுதந்திரப் போராட்டத்தையும் காட்டிக் கொடுக்கின்றனர்.




—விவேக்

இன்று பெரும் இடையூறுகளுக்கு மத்தியில் வடபகுதி மக்கள் வவுனியா ஊடாக கொழும்பு சென்று வருகின்றனர்.

இவர்களில் வியாபாரத்திற்காக கொழும்பிற்கு சென்று வரும் பலர் இருக்கிறார்கள்.

இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியில் தமது வியாபாரப் பொருட்களை கொண்டு வருவதற்கு சிலர் இராணுவத்தினர் சிலருடன் 'சினேக உறவினை' வைத்துக் கொள்ள விரும்புகின்றனர்.

இவ்வாறு 'சினேக உறவை' மேற்கொள்ள முனையும் வியாபாரிகளை எதிரி மிக சுலபமாகத் தனது வலைக்குள் சிக்க வைத்துக் கொள்கிறான்.

சில 'பிரச்சினைக்குரிய' பொருட்களைக் கொண்டு வரும் வியாபாரிகளை இராணுவத்தில் இருக்கும் ஒருவன் சோதனையிட்டு விட்டு ''பரவாயில்லை கொண்டு செல்'' என அனுமதிக்கிறான்;

அடுத்த நாள் போகும் போதும் அவனிடம் அந்த இராணுவத்தினன் கதைக்கிறான்; சிரிக்கிறான்; மீண்டும் கொண்டு செல்ல அனுமதிக்கிறான்.

'சினேகம்' வளருகின்றது. மெல்ல மெல்ல ஒரு துரோகி உருவாகிறான். நாளடைவில் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் சிறப்பு அனுமதிப்பத்திரமும் கிடைத்து விடுகிறது.

பின்னர், வலையில் சிக்கிய சந்தர்ப்பவாதி துரோகியாக மாற்றமடைந்ததும் அவனுடைய தகவல்களினால் எமது மண்ணில் திட்டமிடப்பட்ட வானூர்தி தாக்குதல்களும் விலைமதிப்புள்ள உயிர்களின் இழப்புக்களும் ஏற்படுகின்றன.

சுயநலனுள்ள ஒர் வியாபாரி எவ்வாறு துரோகியாக மாறுகின்றான் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

கொழும்பு சென்று வரும் சிலர் வவுனியாவில் இராணுவத்தின் சில சலுகைகளைப் பெற்றுவிட்டு '' ஓ — ஆமியிலையும் நல்லவங்கள் இருக்கிறாங்கள்'' என்றுசொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

இந்த 'நல்லவங்கள்'தான் சந்தர்ப்பவாதிகளுக்கு வலை விரிப்பவர்கள் என்பதை கவனத்திலிருத்த வேண்டும்.

எதிரிகளின் சூழ்ச்சி வலையில் சிக்காமல் இருப்பதற்கான விழிப்புணர்வும், சிந்தனையாற்றலும் இன்றைய சூழலில் அனைவருக்கும் தேவை.

சுதந்திரத்திற்காகப் போராடும் இம் மண்ணில் அனைத்து மக்களும் நாட்டுப்பற்றுடனும் பொறுப்புணர்வுடனும் ஒவ்வொரு விடயத்தினையும் கையாளல் வேண்டும்.

எம்மையறியாமலேயே எதிரிக்கு விலைபோகும் நிலையினை ஆராய்ந்து தவிர்த்துக் கொள்ளல் இன்றைய சூழலில் இன்றியமையாத ஒன்றாகும்.

கவிதை

## மரங்களின் மாண்பு

மேகத்தில் பதுங்கும் நீரை
மின்விசைக்காந்தம் போல
வேகத்தில் ஈர்க்கும் சக்தி
மரங்க க்கென்றும் உண்டு.

ஊன்றிய விதையோ ஒன்று
உற்பத்தியாகும் நூறு
தோன்றிய மரங்கள் மேலும்,
தொடர்ந்திட விழுதை ஊன்றும்.

காற்றினிலே குழுமை சேர்க்கும்
கனிகளால் பசியைத் தீர்க்கும்
ஆற்றல் சேர் படைகள் தங்க
அமைத்திடும் கூடாரத்தை.

காலையில் விழிக்கும் காகம்,
கூடுகள் மரத்தில் கட்டும்
சாலையின் மரத்தின் கீழே
குடித்தனம் புரிவோருண்டு.

வீழ்ந்து விட்டாலும் கூட
விறகென உதவும் பண்பு
வாழ்ந்து கொண்டிருக்கும்போதும்
மனிதராம் நம்மில் இல்லை.

மரம்பல சேர்ந்தால் தோப்பு
மனிதர்கள் அதுபோல் சேர்வோம்
உரம்பெறும் மரத்தைப் போல
உறுதியை மனத்தில் கொள்வோம்.

வெட்டினால் மேலும் மேலும்
வளர்வது மரத்தின் மாண்பு
பட்டு நாம் துயருற்றாலும்
பொறுமையால் உயர்வைக்
காண்போம்,

இலையுதிர் காலம் சென்றால்
எழில் பெறும் மரங்கள் யாவும்
உலகில் எளியோருக்கும்
உறுதியாய் நல் வாழ்வுண்டு.

(ஆக்கம் - சி. விநாயகமூர்த்தி)
'கிராமராஜ்யம்'
தொகுப்பு - க. கனகராசா

# உண்மைகள்

முகுந்தன் யாழ். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தான். காலில் தொடைப் பகுதியில் ஒரு பெரிய கட்டுடன் அந்தக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான் அவனுடைய தாய் அருகில் இருந்து விசிறியால் விசிறிக் கொண்டிருந்தாள். தந்தை ஏதோ வாங்கி வருவதற்காக வெளியே சென்றிருந்தார்.

அவன் அந்த நீண்ட அறையில் மற்றக் கட்டில்களில் கிடத்தப்பட்டிருந்த ஏனையோரை திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். காயப்பட்டவர்கள் மட்டுமே அந்த அறையில் இருந்தார்கள். மருத்துவமனையில் இப்படிப் படுத்திருப்பது முகுந்தனுக்கு ஓர் புதிய அனுபவம். அங்கு காற்றோடு கலந்து வந்த மருந்து மணம் அவன் சுவாசத்திற்கு புதியது.

"தம்பி கால் நோகுதே காலை அங்காலை இஞ்சாலை அசைக்க வேணாம். காயம் மாறிடும் கெதியா வீட்டை போயிடலாம்."



— புவி

சிறுகதை

அவனின் தாய் அவனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். அப்படி கூறும் வேளைகளில் தாயின் கண்கள் பனித்திருப்பதை அவன் கண்டான்.

அவன் கால்களை அசைக்கும் போது கடுமையாக வலி ஏற்பட்டது. எனினும் அதைப் பற்றி அவன் அதிகம் யோசிக்கவில்லை. அன்று நடந்த அந்த சம்பவத்தை மீண்டும் மனத்திரையில் ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

தனது தந்தையுடன் கொழும்பிற்கு சென்று கொண்டிருந்த வழியில் வவுனியாவில் வைத்துத்தான் அந்த நிகழ்வு நடந்தது.

நொச்சிமோட்டையில் மூன்று நாட்கள் தங்கியிருந்துவிட்டு அன்று காலை வவுனியா இராணுவ சோதனைக் கடவையைக் கடந்து செல்ல வரிசையில் நின்ற பயணிகளுடன் அவனும் தந்தையும் நின்றிருந்தனர். பத்துப்பத்துப்பேர்களாக கடந்து செல்ல இராணுவம் கட்டளையிட்டிருந்தது. அப்போதுதான் அது நடந்தது.

ஒரு இராணுவச் சிப்பாய் வரிசையில் நின்ற பயணிகளை நோக்கி பட படவெனச் சுட்டான். கிட்டத்தட்ட நான்கு பேர் அந்த இடத்திலேயே விழுந்தனர். பலர் காயங்களுடன் திரும்பி ஓடி வந்தனர். முகுந்தனின் தொடையில் ஒரு தோட்டா பாய்ந்திருந்தது. குருதி வழிந்தது. வலி தாங்கமுடியாமலிருந்தது. நோயாளி (அம்புலன்சு) வண்டியொன்றின் மூலம் காயப்பட்டவர்கள் யாழ்மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டனர் முகுந்தனும் அவ்வாறே கொண்டு வரப்பட்டான்.

வவுனியாவில் தினசரி நடக்கும் நிகழ்ச்சிகளை பத்திரிகைகளில் பார்த்திருந்தும் முகுந்தனை அவனது தந்தை அவசரப்பட்டு கொழும்புக்கு அழைத்து செல்ல முற்பட்டமைக்கு காரணமுண்டு.

சமீபகாலமாக முகுந்தனிடம் காணப்பட்ட சில நடவடிக்கைகள்

அவனின் தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவனை உடனடியாக கொழும்புக்குக் கொண்டு சென்று கனடாவில் இருக்கும் அவனது மூத்த சகோதரனிடம் அனுப்பிவிட வேண்டுமென அவர் அவசரப்பட்டார்.

தந்தைக்குப் பிடிக்காத முகுந்தனின் நடவடிக்கைகள் இவைதான்.

பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவரும் போராளிகளின் நினைவஞ்சலியை கவனமாக அவன் படிப்பான். புகைப் படங்களை வெட்டி எடுத்து சேகரிப்பான். விடுதலை கீதங்களை அடிக்கடி முணுமுணுப்பான். வீதிகளில்செல்லும் போராளிகளை ஆர்வத்துடன் பார்ப்பான். கையசைப்பான்.

அவனுடைய இந்தச் செய்கைகள் தந்தைக்குப் பிடிக்கவில்லை.

போராட்டத்தைப் பற்றியும் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை சுடுவது குறித்தும் தனது தந்தையிடம் அடிக்கடி துருவித் துருவிக் கேள்விகள் கேட்டவண்ணமிருப்பான் அவன்.

''நாங்கள் பேசாமலிருந்தால் ஆமி ஒன்றும் செய்யமாட்டான். 'இந்தப் பொடியள்' மாதிரி துவக்கை எடுத்துக் கொண்டு திரிந்தால் தான் ஆமி சுடுவான். படிக்கிற பிள்ளைகளை ஆமி சுடாது' இப்படிப் 'பொடியளின்ர' படங்களை வைத்திருந்தால் தான் சுடுவான்.''

பன்னிரண்டு வயது மகனுடைய கேள்விகளுக்கு அந்தத் தந்தை இப்படித்தான் பதில் சொல்லுவார்.

பத்திரிகைகளைப் படிக்க விடமாட்டார். ''இதை விட்டுப் போட்டு பாடத்தை எடுத்துப்படி'' என்பார். அவன் வெட்டி வைக்கும் படங்களை எல்லாம் எடுத்து கிழித்தெறிந்து விடுவார்.

அன்று வவுனியாவில் நடந்த நிகழ்ச்சி தனது தந்தை தனக்குக் கூறியதெல்லாம் பொய்யானவை என்பதை முகுந்தனுக்கு உணர்த்தியிருக்கவேண்டும். தந்தை சொன்னவற்றையும் அன்று நடந்த நிகழ்ச்சியையும் நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

சாப்பிடுவதற்கு 'பிஸ்கட்' வாங்கி வந்த தந்தையின் கையிலிருந்த பத்திரிகையை முகுந்தன் எடுத்தான். தந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''அப்பா அன்றைக்கு நாங்கள் சும்மாதானே நின்றோம். துவக்கு வைத்திருக்கவில்லையே! ஆனால், ஏன் ஆமி எங்களைச்சுட்டான் ?''

தந்தை பதில் சொல்லவில்லை. அவரால் பதில் சொர்லத் தெரியவில்லை.


''தம்பி இந்தா பிஸ்கட்டைச் சாப்பிடு'' என்று பிஸ்கட்டைக் கொடுத்தார்.

பத்திரிகையில் இருந்த போராளிகளின் நினைவஞ்சலிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். பின்னர் ஒரு பிளேட்டினால் அவற்றை வெட்டி சேகரிக்கத்தொடங்கினான்.

தந்தை அதனைத் தடுக்க முற்படவில்லை. பேசாமல் பார்த்துக் கொண்டேயிருந்தார். தனது பொய்களை அந்தச் சிறுவன் இனி மேல் நம்பமாட்டான் என்று எண்ணியிருப்பாரோ என்னவோ...!

குறள் வெள்ளம்

## தந்தையின் கடமை



ஆண்பிள்ளை வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். பெண் என்றதும் முகம் சுழிக்கிறார்கள். இந்த அறியாமை என்னும் நிலை மாற வேண்டும்.

நினைத்தபடி ஆண்பிள்ளை பெற்றுவிட்டால் மட்டும் இலட்சியம் நிறைவேறிவிடுமா? அத்தோடு தந்தையின் கடமை தீர்ந்து விட்டதா?

பிள்ளை ஆணாக இருக்கட்டும் இல்லை பெண்ணாக இருக்கட்டும். துள்ளித் திரிகின்ற வயதினிலே, முழுவதும் பிள்ளையின் போக்கிலே விட்டு விடாது துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பிடல் வேண்டும்.

பள்ளிப் படிப்பு மட்டும் போதாது, உலக நடப்புகளையும் பரந்த நுட்பமான அறிவினையும் வளர்த்திடத் துணை நிற்றல் தந்தையின் கடன்.

நாளை எத்தத்துறையிலே, எந்தச் சபையிலே (அவையத்து) அந்தப் பிள்ளை நுழைந்தாலும் அவ்விடத்தில் அதன் அறிவு, திறமை மிளிர வேண்டும்.

இந்த நிலைமைகு பிள்ளையை ஆளாக்குதலே பெற்றார் கடமையாகும்.

''தந்தை மகற்காற்றுக் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்''

- ‹0067
(புதல்வரைப் பெறுதல்)

-அம்பிகைபாகன்

# யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

## -நூல் ஆய்வரங்குகள்-

'சாளரம்' வெளியீட்டகத்தின் முதலாவது வெளியீடான 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற நூலின் ஆய்வரங்குகள் 29-03-92 அன்று வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 05-04-92 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் நடைபெற்றன.

நெல்லியடியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பருத்தித்துறை காட்லிக் கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் தலைமைதாங்கினார். எழுத்தாளர் தெணியான், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. நடராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகி ஆகியோர் உரையாற்றினர்.

திரு. தெணியான் பேசுகையில்- 'சமுதாயத்தில் வாழ்ந்து மறைந்த பெரியார்களை மதிப்பீடு செய்யும் போது சமுதாயத்தின் அன்றைய பிரச்சினைகள் பற்றிய அவர்களது அணுகுமுறை, அப் பிரச்சினைகள் அவர்களிடம் ஏற்படுத்திய உணர்வலைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே அவர்களை மதிப்பீடு செய்ய வேண்டும்' என்ற நூலின் முன்னுரையைத் தொட்டுக்காட்டி அவ்வாறானதோர் முயற்சியாக இந்நூல் வெளிவந்திருப்பதாக பாராட்டினார்.

திரு. நடராசா அவர்கள் நூலைப்பற்றியும் நூலில் குறிப்பிடப்பட்ட காலங்களில்இடம்பெற்ற அரசியல், வரலாற்று விடயங்கள் குறித்தும் நீண்ட நேரம் உரையாற்றினார்.

திரு. விபுலானந்தரின் முற்போக்கான பணிகள் பற்றியும் சமூகத்தின் மீதான அவரின் புரட்சிகர பார்வைகள் குறித்தும் திரு. யோகரட்ணம் யோகி அவர்கள் எடுத்துரைத்தார்.

உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்த திரு. விவேக் நன்றியுரை வழங்கினார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம் பெற்ற ஆய்வரங்கிற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை தாங்கினார். திரு. யோ. ஜெயகாந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார் புனித சம்பத்தரசியார் கல்லூரி அதிபர் வண. பிதா. மைக்கல் ஜோசப் அடிகள், திரு. மு. திருநாவுக்கரசு விடுதலைப் புலிகள் கல்விப் பிரிவைச் சேர்ந்த கண்ணம்மா (யூடி) ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

வண. பிதா மைக்கல் ஜோசப் அவர்கள் உரைநிகழ்த்தும் போது திரு. விபுலானந்தர் தமது கல்லூரியில் அறிவியல் ஆசிரியராக கடமையாற்றிய காலகட்டத்தை நினைவுகூர்ந்தார். அன்பு, அறிவு, ஆன்மீகசக்தி இம் மூன்றுமே ஒரு சமூகத்தை நல்வழிப் படுத்த உதவுமென்றும், விபுலானந்தரிடம் இம் மூன்று அம்சங்களும் காணப்பட்டன எனவும், கூறினார்.

திரு. மு. திருநாவுக்கரசு உரையாற்றுகையில் தமிழீழ மக்களின் சமூக பின்னணியில் வைத்து விபுலானந்தரை நோக்கும் நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டினார். அத்தோடு நூலில்பல குறைபாடுகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். இரண்டு சான்றுகளை மட்டும் வவத்துக் கொண்டு இந்நூல் எழுதப் பட்டிருப்பதாகவும், வேறு பல சான்றுகள் சுட்டிக் காட்டப்படவில்லை எனவும் கூறினர்.

அக்காலத்தில் வாலிபர் காங்கிரசில் இணைந்து செயற்பட்ட ஹண்டி பேரின்பநாயகமும், விபுலானந்தரும் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டவர்களல்ல; எனக் குறிப்பிட்ட அவர், விபுலானந்தர் யாழ்ப்பாணத்தில் வேர் விட முடியாமல் போனமை, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தோல்வியுற்றமை, இராமகிருஷ்ணர் மடம் அமைக்கும் விபுலானந்தரின் முயற்சி முடியாமல் போனமை என்பவற்றிற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும் என்றார். விபுலானந்தரின்சிந்தனைகள் எங்கிருந்து தோற்றம் பெற்றன? அவரின் வழிகாட்டிகள் யார் என்பதையும் ஆராயப்பட வேண்டும். விபுலானந்தரின் அடித்தளம் மிகப் பெரியது. இதனை இந்நூல் வெளிப்படுத்தத் தவறிவிட்டது எனவும் அவர் கூறினார்.

அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த முற்போக்குச் சிந்தனையாளர்களான ராஜ்மோகன் றோய் எம். என். றோய், பாரதி, விவேகானந்தர் ஆகியோரின் சிந்தனைகளைப் பெற்றவராகவும் விவேகானந்தரை தமது வழிகாட்டியாக கொண்டவராகவும் விபுலானந்தர் இருந்திருக்கக்கூடிய சான்றுகள் இருப்பதாக தான் கருதுவதாக அவர்தொடர்ந்து கூறினார். விபுலானந்தர் சித்தர் என நூலில் குறிப்பிடப்பட்டிருப்பது தவறு எனவும் குறிப்பிட்ட திரு. மு. திருநாவுக்கரசு தமது உரையின் இறுதியில் 1924 ம் ஆண்டு விபுலானந்தர் இலங்கையில் இல்லை எனவும்

(24ம் பக்கம் பார்க்க)

# எஸ்கிமோ மக்களுக்குப் பனிக்கட்டி விற்பனை செய்யப்படுகின்றதா?

கனடாவின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதியானதும், பனி உறைந்ததும், வெட்டவெளியுமானதுமான 770.000 சதுர மைல்களைக் கொண்ட வடதுருவப்பிரதேசத்தைப் பிரித்துநுணாவற் (Nunavut) என்றழைக்கப்படும் ஒரு மாநிலத்தை உருவாக்கி அங்கு வாழும் 17,500 எஸ்கிமோ மக்களுக்குச் சென்றவாரம் கனடா அரசாங்கம் கொடுத்த இச்சம்பவம், ஒரு அரசாங்கத்துக்கும் பூர்வகுடி மக்களுக்குமிடையே மற்றவர்களால் உதாரணமாகக் கொள்ளக்கூடிய வகையில் தீர்த்துவைக்கப்பட்டதும், உண்மையான சமாதான வழிமுறைகளைக் கையாண்டு பரிமாற்றம் செய்யப்பட்டதுமான வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நடவடிக்கை எனக் கருதப்படுகின்றது. இந்த உடன்படிக்கையை அமுலாக்குவதற்கு வடமேற்கு மாநிலமும், தேசிய அரசாங்கமும் இணங்குவார்களேயாகில் இனுயுற் (Inuit) மக்கள் என அழைக்கப்படும் எஸ்கிமோ மக்களுக்கும் 1670 ஆம் ஆண்டில் ஐரோப்பாவிலிருந்து ஹட்சன் குடா (Hudson Bay) இல் குடியேறிய மக்களின் வழித்தோன்றல்களுக்குமிடையே 200 வருடங்களாக நிலவிவரும் பகையுணர்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையாக இது அமையும். இனுயுற்றுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நுணாவற் துங்கானிக் சம்மேளனத்தின் (Tunganik Federation of Nunavut) பிரதம இணைக்கப் பேச்சாளராகிய தகாக்கேர்ளி (Tagak Curley) இந்த உடன்படிக்கையை ஒரு நல்ல தீர்வெனக் கூறியுள்ளார்.

எஸ்கிமோ மக்களுக்குப் பனிக்கட்டி விற்பதில் ஒரு புதிய பாணியைக் கையாள்வதுபோல் தோன்றுகின்றதென இந்த நுணாவற் விவகாரத்தைச் சிலர் கருதுகின்றார்கள். ''கனடா எதை விட்டுக்கொடுத்துவிட்டது? இதை ஒரு பொய்யான நடவடிக்கை எனக் கூறலாம்'' என மனித உரிமைக் குழுவைச் சேர்ந்தவரும், மசாசூசெட்ஸ் கேம்பிறிட்ச் பல்கலைக்கழகத்தின் பண்பாட்டு வாழ்வு ஆராய்ச்சித் திட்டத் தலைவருமான திரு ஜெசன் கிளே (Jason Clay) கூறுகின்றார். ''இந்தத் தீர்வில் அடிப்படை அம்சங்கள் ஒன்றுமில்லை'' எனவும் அவர் கூறுகின்றார். இனுயுற் என்றழைக்கப்படும் எஸ்கிமோ மக்கள் பல நூற்றாண்டுகளாக மீன் பிடித்தும், வேட்டையாடியும் வந்த முழுப் பிரதேசத்தில் ஆறில் ஒரு பங்கு நிலமான 1ɜ6.000 சதுரமைல்களுக்கு மாத்திரமே இந்த உடன்படிக்கை அவர்களை உரித்துடைமையுடையவர்களாக்குகின்றது. எண்ணெய், வாயு, கனிப்பொருள்கள் நிறைந்த இடங்களுடன் எஸ்கிமோ மக்களின் வழித்தோன்றல்கள் மூலம் வந்த எல்லா நிலங்களுக்குமான உரிமையை அவர்கள் கைவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பாரிய விலையைக் கொடுத்தே அவர்கள் இதைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதற்கு அவர்கள் சம்மதியாவிடில் ஒவ்வொரு வருடமும் பெறப்படும் வருமானத்தில், அதாவது நிலத்திலிருந்து பெறப்படும் செல்வமான 1.7 பில்லியன் டாலர்களில் 50% விகிதமும், வேலதிக வருமானங்களிலிருந்து 5% விகிதமும் இவர்களுக்கு வழங்கப்படும் எனவும், அத்துடன் தலா ஒருவருக்கு 56,·00 டாலர்கள் வீதம் பதின்நான்கு வருடங்களுக்கு 99υ மில்லியன் டாலர்களை இனுயுற் மக்கள் பெற்றுவருவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

''இதிலிருந்து நான் பணத்தை எதிர்பார்க்கவில்லை'' என ஹட்சன் குடாவின் வடமேற்கில் அமைந்துள்ளதும், 1·00 மக்களைக் கொண்டதுமான ரான்கின் (Rankin) நகரைச் சேர்ந்த 35 வயதான பாடசாலை ஆசிரியர் மன்னி தொம்சன் (Manni Thompson) கூறுகின்றார். ''அதிக கட்டுப்பாடுகளையே நாங்கள் விரும்புகினறோம்'' என அவர் மேலும் கூறுகின்றார். தங்களுடைய உரிமைகளை வரையறுக்கும்படி இனுயுற் மக்கள் கனடா அரசாங்கத்தைப் பல ஆண்டுகளாக கோரி வருகின்றார்கள். குவபெக் (Quebec) இல் பிரிவினைவாதம் தீவிரமாகி இருப்பதன் காரணமாக எஸ்கிமோ மக்களின் பல பிரச்சினைகள் இந்த உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. அரசாங்கத்திடமிருந்து தங்களுடைய உரிமைகள் யாவற்றையும் பெற்றுக் கனடாவில் வாழ்வதையே இனுயுற் மக்கள் விரும்புகிறார்கள்'' எனச் செவ்விந்தியர்கள் விவகாரங்களுக்கும் வடக்குப் பிரதேச வளர்ச்சிக்கும் பொறுப்பான அமைச்சர் ரொம் சிட்டொன் (Tom Siddon) ''நியூஸ்வீக்'' பத்திரிகைக்குக் கூறியுள்ளார். ''பிரிந்து செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை'' என அவர் மேலும் கூறினார். தங்களுடைய உரிமைகளை வரையறுக்கும்படி எஸ்கிமோ மககள் கனடா அரசாங்கத்தைக் கோரியது எஸ்கிமோ மக்கள் அல்லாத வேறுபல பூர்வீக குடிமக்களை ஆத்திரமடையச் செய்துள்ளது. காணியுரிமைக் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பூர்வீக உரிமைகளைக் கைவிட வேண்டுமென அரசாங்கம் தொடர்ந்தும் கட்டாயப்படுத்தி வருகின்றது''எனச் சுயாட்சிக்கு அரசியல் யாப்பில் உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும் எனக் கோரும் 592,000 செவ்விந்தியர்களின் தேசியத் தலைவர் திரு. ஒவிடே மெர்கிரெடி (Ovide Mercredi) கூறியுள்ளார்.

## வறுமைப்பிணி

இருப்பினும் உலகத்திலுள்ள மற்றைய 5000 பூர்வீக இன மக்களின் வாழ்வுடன் எஸ்கிமோ மக்களின் வாழ்வை ஒப்பிடுகையில் எஸ்கிமோ மக்கள் நல்ல தீர்

வையே பெற்றிருக்கிறார்கள் எனக் கருதவேண்டியுள்ளது. அதிகமான பூர்வீக இனமக்கள் வறுமை, பஞ்சம், பிணி, வன்செயல்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் 400,000 முஸ்லிம்களைக் குடியமர்த்துவதற்காக சிட்டாகொங் மலைப் பகுதியில் (Chittagong Hill) வசித்துவந்த சக்மா (Chakma) என்ற பூர்வீக குடிமக்களை அவர்களது இருப்பிடங்களிலிருந்து பங்களாதேச அரசாங்கம் விரட்டியது என லண்டனில் தலைமையகத்தைக் கொண்ட சர்வதேச வாழ்வு Survival International) என்னும் மனித உரிமைக்குழு கூறுகின்றது. அமேசன் (Amazon) ஆற்றோரங்களில் வசித்துவரும் 22,000 யனோமாமி (Yanomami) இந்தியர்களின் நிலை இப்போது சற்று முன்னேற்றமடைந்து வருகின்றது. இவர்களுக்கென பிறேசிலும் (Brazil), வெனிசூலாவும் (Venezuala) தனியாக ஒதுக்கிய பகுதிகளிலும் மலேரியாவைப் பெருமளவில் பரப்பும் சட்டவிரோதமாகத் தங்கம் சேகரிப்போருக்கு எதிரான பாதுகாப்பு பெயரளவிலேயே இருக்கின்றது. இந்தப் பிரச்சினை பொருளாதார ரீதியானதும். பண்பாட்டு ரீதியானதுமாகும்: உலகத்தின் பரப்பளவில் 25% விகிதத்தைப் பூர்வகுடி மக்கள் கொண்டிருப்பதுடன் உலகத்தின் விலைமதிப்பற்றதும், அரிதானதுமாகிய வளங்களும் அப்பகுதியில் இருக்கின்றன. கனடா போன்ற சனநாயக நாடுகளில் இது ஒரு நலம் பயக்கும் கொள்முதலாக பூர்வீகக் குடிகளுக்கு அமைகின்றது. ஆனால் செல்வத்தைத் தேடிப் பெருக்க அவாவுற்றிருக்கும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு இது ஒரு ஈர்ப்புச்சக்தியாக விளங்குகிறது.

—றொம் போஸ்ற், மோலி கொலின்

## தொட்டால் சுடுவதேன்

எங்கள் உடலின் வெப்பநிலையிலும் பார்க்கக் கூடுதலான வெப்பநிலையிலுள்ள எந்தப்பொருளைத் தொட்டாலும் அது எங்கள் உடலில் சுடுகின்றது. அவ்வாறு சுடுவதற்கான காரணம் என்ன?

எங்கள் உடல் உயிரலகுகளினால் (CELLS) உருவானது. இந்த உயிரலகுகள் அணுமூலங்களால் (MOLECULES) உருவானவை. இவ்வணு மூலங்கள் உடலின் சாதாரண வெப்பநிலையில் சமகதியில் அசைகின்றன.

அதிக வெப்ப நிலையிலுள்ள ஒரு பொருளின் அணுமூலங்கள் அந்த வெப்பநிலைக் கேற்பத் துரிதமாக அசைகின்றன. அப்பொருள் எங்கள் உடலின் ஒரு பகுதியில் முட்டும்போது அதன் துரிதமாக அசையும் அணுமூலங்கள் உடலின் குறிப்பிட்ட பகுதியிலுள்ள அணுமூலங்களைத் துரிதமாக அசைய வைக்கின்றன. இத் துரித அசைவினால் உருவாகும் அதிர்வு உயிரலகுகளில் சிதைவுகளை ஏற்படுத்துகின்றது. இச்சிதைவுகள் ஏற்படும் போது உண்டாகும் எரிவுணர்வையே ''சூடு'' என்று சொல்கிறோம்.

இச் சிதைவுகளைச் சீர் செய்வதற்காக அப் பகுதியின் இரத்தோட்டம் அதிகரிக்கின்றது. நெருப்பு அல்லது வெப்பமான பொருள் சுட்ட இடத்தில் தோல் சிவப்பதற்கு இதுதான் காரணம்.

அதிக வெப்பம் கொழுப்பு, அணுமூலங்கள் போன்றவற்றை எரித்து அழிக்கும் போது காயங்கள் ஏற்படுகின்றன.

—சிவா—

## யாழ்ப்பாண...

(22 ம் பக்கத்தொடர்ச்சி)

1926 ம் ஆண்டே அவரின் இலங்கை வருகை நிகழ்கிறது எனவும் இவ்வாறான ஆய்வினை மேற்கொள்பவருக்கு மிகுந்த சமூகப்பொறுப்பு அவசியம் எனவும் பொதுவாகக் கூறி விடைபெற்றார்.

அடுத்து பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது தலைமையுரையில் பேசுகையில் – விபுலானந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய பண்பாட்டின் அரசியலைப் பற்றியும், அரசியலின் பண்பாடு யாது என்பது பற்றியும் நூலாசிரியர் சொல்ல முயன்றிருக்கிறார். இவ்விரண்டு அம்சங்களிலும் முத்திரையைப்பதிவு செய்த சேர் பொன். இராமநாதன், ஆறுமுகநாவலர் ஆகியோரினது பண்பாட்டினைச் சொல்லும் தகவல்கள் இந்நூலில் எறியப்பட்டிருக்கின்றனவே தவிர ஆராயப்படவில்லை என்று விபரித்தார். இவர் தமது உரையில் யாழ்ப்பாணத்தில் எழுதப்படாத வரலாறு இருப்பது குறித்து நீண்டநேரம் விபரித்தார்.

அடுத்ததாக பதிலுரை நிகழ்த்திய நூலாசிரியர் திரு. கௌரிகாந்தன் வெளிப்படையாக ஆய்வுகள் மேற் கொண்டமைக்காக நன்றிதெரிவித்தார். சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை கவனத்திலெடுத்து ஆராய்வதாகக் கூறினார்.

திரு. சிவா சுப்பிரமணியத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவடைந்தது.

## ஓவியம் ⇄ வாக்கியம்



இந்த ஓவியத்திற்கு
மனதை நெருடுவதைப்போல்
கவிதை அல்லது வாக்கியம்
உங்களால் எழுதமுடியுமா?
எங்கே பார்ப்போம்!

## எழில்

உங்கள் தோற்றத்திற்கு மேலும் எழிலூட்டுகின்றன எழில் ஆடைகள். நாங்கள் உங்கள் அழகிய தோற்றத்திற்கு நவநாகரிகமான ஆடைகளைத் தயாரிக்கின்றோம்.

**நீங்களும் மாறுங்கள் எழில் ஆடைகளுக்கு**

தலைமையகம்

**எழில்**

கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

*வியாபார விசாரணைகள்:-*

ஜோ. எக்கட்டன்
செனித் சந்தைப்படுத்துனரும்,
விளம்பரமுகவரும்.

19/3 கொழும்புத்துறைச் சாலை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

நாங்கள்

உங்கள் உணவிற்கு மேலும்
சுவையூட்டுகின்றோம்

*எமது நவீன சமையல் கலையகத்தில் உருவாகும் உணவு வகைகள் எம் மண்ணின் பாரம்பரிய மூலப் பொருட்களைக் கொண்டு தயாராகின்றன. ஒருமுறை எமது உணவகத்திற்கு விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.*

சுவையான, சுத்தமான, நிறைவான
உணவிற்கு

ஜோ. எக்கட்டனின்

## ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

19/3 கொழும்புத்துறைச் சாலை
சுண்டிக்குளி.
*(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)*

எல்லா வகையான உணவுக் கட்டளைகளும்
உடனுக்குடன் கவனிக்கப்படும்

எமக்கு வேறு கிளைகள் யாழ்நகரில் இல்லை.

# உங்கள் கண்ணாடிக் கனவுகள் நனவாகின்றன



நாங்கள் வாடிக்கையாளருக்கு வெறுமனே மூக்குக் கண்ணாடியைக் கொடுப்பதில்லை. அனுபவம் வாய்ந்த தொழில் நுட்ப ஆய்வின் பின்னரே வாடிக்கையாளருக்கு மூக்குக் கண்ணாடியை வழங்குகிறோம். அதிநவீன தொழில் நுட்ப மூக்குக் கண்ணாடியைப் பெற எம்மை அணுகுங்கள்.

## எஸ். எம். பெர்ணாண்டோ

(வடபகுதியில் பிரபல்யம் பெற்ற மூக்குக் கண்ணாடி விற்பன்னர்கள்)

580, மருத்துவமனைச் சாலை,
(இலங்கை வங்கி அருகே)
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் கவனத்திற்கு, யாழ்நகரில் எமக்கு வேறு கிளைகள் நிச்சயமாக இல்லை.

*விளம்பர வடிவமைப்பு:- செனித் ஜோ. எகட்டன்*